# மோகத்திரை

By **லக்ஷ்மி**

...திரை

1

இழுத்து... நிறுத்திவிட்டு ஷட்டரைக் கீழே ...ான் சிவராமன்.

ஒரு சில மீட்டர் தூரத்திலிருந்த தன் குடியிருப்புப் பகுதிக்கு நடக்க முடியாதுபோல ஒரு உடல் அயர்ச்சியில் தொய்ந்துபோய் விட்டிருந்தான்.

முதலாவது எண் கொண்ட அந்த ஃபிளாட்டில் அவனும் மாயாவும் குடியேறி வருஷம் ஒன்று முடிவடைந்து விட்டிருந்தது. அதற்குள் அவனது வாழ்க்கையில் அந்தப் பேரிடி...மகத்தான இழப்பு எல்லாம் ஏற்பட்டுவிட்டிருந்தன.

முகமெல்லாம் பூத்த வியர்வைத் துளிகளைக் கைக் குட்டையால் துடைத்துக் கொண்டு கராஜிலிருந்து ஃபிளாட் செல்லும் பாதையில் மெல்லத் திரும்பினான். நகரத்தில் புதிதாக உருவாகிவிட்டிருந்த, 'காலனி' என்ற பெயர் தாங்கிய குடியிருப்புப் பகுதிகளில் அதுவும் ஒன்று.

மாடி, கீழ் என்று இரண்டு ஃபிளாட்டுகள் கொண்ட மூன்று கட்டடங்கள் ஒன்றை ஒன்று எதிர் நோக்கியபடி

ஒரு பரந்த மைதானத்தில் சுற்றுகளுடன்—தார் பாதை யிட்டு வழி அமைத்திருந்ததொரு சுத்தமான குடியிருப்புப் பகுதி. மொத்தம் ஆறு ஃபிளாட்டுகள். அவைகளில் வசிப்பவர்கள் உபயோகத்திற்கென்று இடதுபுறச் சுவர் ஓரமாக வரிசையாக எண்ணிட்டுக் கட்டப்பட்ட ஆறு கராஜ்கள். ஒரு கட்டடத்திற்கும் அடுத்ததற்கும் இடையே அகலமான இடைவெளி—அலுப்புத் தெரியாதிருக்க அதில் பல பூஞ்செடிகள். பின்பக்கம் குழந்தைகள் ஓடி விளையாடத் தனியானதொரு செப்பனிட்ட வெற்று வெளி...

குப்பை கூளங்கள் கண்களிலே படாததொரு சுத்த மான சுற்றுப்புறம். அதில் குடியேறி இருந்த அத்தனை பேரும் இளவயது தம்பதியர். அதனாலேயோ என்னவோ மூக்கை உறிஞ்சிக்கொண்டு முரண்டு பிடிக்கும் சின்னக் குழந்தைகள் அதிகமில்லாது, கசமுசா சப்தமில்லாது ஆசிரமம் போன்ற அமைதி நிலவியதொரு இடம்.

உத்தியோக உயர்வும், வீட்டு வாடகைச் சலுகையும், கம்பெனி காரும் கிடைத்தவுடன் சிவராமன் தன் தகுதி களுக்கு உகந்ததானதொரு சுத்தமான குடியிருப்புப் பகுதி யில் வீடு தேடத் தொடங்கினான்.

ஒரே ஒரு படுக்கையறை, சிறு முன்னறை, திரும்பினால் சுவர் இடிக்கும் சமையலறை என்று ஒரு சிறிய ஃபிளாட்டில் குடியிருந்து அலுத்து விட்டிருந்தாள் மாயா. வாயில்புறத்தில் ஒரு பக்கம் மளிகைக் கடை, மற்றொரு புறம் தையல்கடை—தெருவில் கூவிக் கொண்டு செல்லும் காய்கறிக்காரர்களின் இரைச்சல்...பஸ்களின் அலறல்...ரிக்ஷாக்காரர்கள் தட்டும் மணி ஓசை என்று நாலாவித சப்தத்திலே அவளது நரம்புகள் பொடிப் பொடியாகின. இரவு வேளையில் கூட அவர்கள் வசித்த அந்தச் சாலையில் சப்தத்துக்கு ஓய்வு இருக்கவில்லை.

''நாம் சமாளித்துக் கொண்டு வாழ முடியும்—குழந்தை மோகனுக்குத்தான் சப்தம் ஒத்துக்கவே இல்லை. அடிக்கடி தூக்கத்திலிருந்து அலறி எழுந்துடறான். உங்களைக் குறை சொல்லலை... நம்மைப் போல நடுத்தர வர்க்கத்தவர்களுக்கு — இருக்கிற இடமே சுகம்னு இருக்கணும்'' துக்கம் தொண்டையை அடைக்க அவள் சொன்னபோதுதான் வீடு தேடும் தீவிர முயற்சியில் இறங்கினான்.

வேலை உயர்வு கிட்டியது. அவனது முயற்சி பன் மடங்காகியது. அடுத்த வீட்டுக்காரர் மீன் செதில்களையும் தலையையும் கூட்டிக் குவித்துக் கொண்டு வந்து லாந்தர் கம்பத்தருகே கொட்டிவிடும்போது, அதன் வாசனை அவனது சிறு ஃபிளாட்டுக்குள் ஆக்கிரமித்த போது, மாயா குமட்டலுடன் வயிற்றைப் பிடித்துக் கொண்டு வேதனைப் படுவதை அவனால் சகிக்க முடியவில்லை.

அடுத்த வீட்டுக்காரரிடம் சண்டையிட்டுப் பயனில்லை.

''ரோடு உன் அப்பன் வீட்டுதா? குப்பையை எங்கே வேணுமானாலும் கொட்டுவேன்'' என்று அடம் பிடிக்கும் அடாவடிப் பேர்வழி அவர். அவனைப் பார்க்கப் பல உயர் மட்டத்து அதிகாரிகள் இனி அவன் வீட்டுக்கு வரக்கூடும். அழுகிய மீன் வாசனையைத் தாண்டிக் கொண்டு அந்த நெருக்கமான ஃபிளாட்டுக்குள் அவர்களை அழைத்து வந்து உபசரித்து அனுப்ப அவனுக்கு வெட்கமாகத் தானிருக்கும். எப்படியாவது அந்த மாத முடிவிற்குள் ஒரு நல்ல ஃபிளாட்டைத் தேடிக் கண்டுபிடித்துவிட வேண்டும் என்று அவன் எடுத்துக் கொண்ட தீவிர முயற்சி வீண் போகவில்லை.

ஜாம்பியாவில் மூன்று ஆண்டுகள் வேலை செய்யும் வாய்ப்பைத் தேடிக் கொண்டு விட்ட அவனது கல்லூரித் தோழன் ஜகந்நாதன் சமயத்திற்குக் கை கொடுத்தான்.

''சரோஜா காலனியில் ஒரு ஃபிளாட்டை வாங்கி விட்டிருக்கேன். புத்தம் புது ஃபிளாட். குடிபோகக் கூடத் தேதி வச்சிருந்தோம். இந்த வேலை வந்து குறுக்கிட்டுவிட்டது. கண்டவங்களுக்கு வாடகைக்குக் கொடுத்தால் திரும்பி வரும்போது ஃபிளாட்டைக் கெடுத்துக் குட்டிச்சுவர் ஆக்கிடுவாங்க. அத்தோட லேசில் காலி பண்ணித் தரமாட்டாங்க. ஒரு நல்ல மனிதர் யாராவது கிடைத்தால்...'! என்று நண்பன் கவலைப்பட்ட போது...

''அடப் பழி! என்னைப் பார்த்தால் ஒரு நல்ல மனிதனாக உன் கண்களில் படலையா? உன் நிபந்தனைப்படி வாடகையை கம்பெனி மூலம் உன் வங்கியில் கட்டி விடறேன். வீட்டைக் கண் போலப் பார்த்துக்கறேன். நீ திரும்பி வறதுக்குள்ளே நான் வேறு சொந்தமாக எங்கே யாவது இடம் பார்த்து, லோன் எடுத்து...'' கற்பனையில் திளைத்தபடி நண்பனின் தோளைத் தழுவிக் கொண்டான்.

''ஓ. கே. இட் ஈஸ் எ டீல்...'' என்று கைகளைப் பலமாக அழுத்திக் குலுக்கினான் நண்பன் ஜகந்நாதன்.

சரோஜா காலனி உண்மையிலேயே ஒரு புத்தம் புது ரோஜா போல, நகரத்தின் பல வசதிகளையும் கொண்ட பிரதான இடத்திலே அமைந்ததொரு குடியிருப்புப் பகுதியாக இருந்ததைப் பார்த்ததுமே மாயாவுக்கு ரொம்பவும் பிடித்துவிட்டது.

ஒவ்வொரு ஃபிளாட்டின் முன் பக்கத்திலும் ஒரு அழகான லிட்அவுட், ஓரத்துக் கூரையிலிருந்து தொங்குகிற சங்கிலி பிணைத்த தொட்டியில் விதவிதமான செடி கொடிகள். பார்க்க ஒரு அழகான பார்க் போல, வியப்பிலே மூழ்கிப் போனாள் மாயா.

குடியேற நாள் பார்த்து, உப்பும் ஜலமும் வைத்து, விளக்கேற்றி, விநாயகருக்கு மாலை போட்டு, கற்பூர ஜோதி காட்டி வணங்குமுன்பே, அவனுக்கு நகரத்

பிரபல சாமான் கடைக்குச் சென்று சோபா செட், படுக்கையறை ஸ்பிரிங் கட்டில்கள், ஜன்னலுக்குத் திரைச் சீலை எல்லாவற்றிற்கும் ஆர்டர் கொடுத்துவிட்டான்.

முன் அறையையும், சாப்பாட்டு அறையையும் பிரிக்க மரத்தால் செய்யப்பட்ட டிவைடரை வைத்து, அதன் அடுக்குகளில் புத்தகங்களிலிருந்து நடராஜர் சிலை வரை பல பொருள்களை வைத்து அழகு படுத்தி, இடுப்பில் கையை வைத்துக் கொண்டு கொஞ்ச தூரத்தில் நின்றபடி வீட்டின் உட்புற அலங்காரத்தை அழகு பார்த்து அவள் மகிழ்ந்ததெல்லாம் நினைவுக்கு வந்தபோது அவனுக்குத் துக்கம் நெஞ்சை அடைத்தது.

அந்த நினைவெல்லாம் ஒரு கற்பனையாக நெஞ்சை அமுக்கியது போன்ற வேதனையில் துடித்துப் போனான் சிவராமன்.

ஒரு சில நொடிகளில் அவன் படி ஏறி, சிறு நடையைக் கடந்து தன் ஃபிளாட்டின் முன் கதவருகே வருவதற்குள் அம்மா கதவைத் திறந்து தயாராக வைத்திருந்தாள்—

திக்கென்ற உணர்வில் ஒரு கணம் அவன் ஆடிப் போனான்.

வெள்ளிக் கிழமை மாலை வேளை...மாயா ஸ்நானம் செய்த கூந்தலை அழகாக வாரி முடித்துக் கொண்டு, அதைச் சுற்றி மல்லிகை மலர்ச் சரத்தைச் சுற்றிக் கொண்டு, கஞ்சி மொட மொடப்பில் புஸ்ஸென்று விரிந்து நிற்கும் ஆர்கண்டிப் புடவையில் மேகப் படலத்திலிருந்து இறங்கி வந்த கனவுக் கன்னியைப் போல ஒயிலாக வாசற் கதவருகே அவன் வருகைக்குக் காத்திருப்பாள்—

''ரொம்பக் களைப்பா இருக்கு—அது இதுன்னு சாக்குப் போக்குக்கூடாது. கை கால் அலம்பிண்டு காப்பிப் சாப்பிட்டுட்டு வேஷ்டி ஷர்ட்டில் கோவிலுக்குப்

புறப்படுறீங்க. இன்னைக்கு வெள்ளிக்கிழமை. பகவதி அம்மனுக்கு விசேஷமான நாள்...''

தெருக் கோடியிலிருக்கும் அந்தச் சிறிய கோவிலில் எழுந்தருளியிருந்த அருள்மிகு பகவதி அம்மனுக்கு ரொம்பவே சக்தி உண்டு என்று அங்கு பிரசித்தம்.

வந்ததிலிருந்து வாரம் தோறும் வெள்ளிக்கிழமை தவறாது பகவதி அம்மனுக்கு அவள் அர்ச்சனை செய்து வழிபட்டு வந்தாள்.

அதனால்தானோ என்னவோ, அம்மன் அவளைச் சீக்கிரம் தன்னிடம் அழைத்துக் கொண்டு விட்டாள்!

கார் சத்தம் கேட்டதும் ஓடி வந்து கதவைத் திறந்து வைத்துவிட்டு முகமெல்லாம் சிரிப்பாய்ச் சிரிப்பாளே, மாயா!

அவள் எப்படித்தான் மாயமாக அவனது வாழ்க்கையினின்று மறைந்து போனாள்?

''மாயா! எங்கே இருக்கே?'' என்று ஓங்கிக் குரல் கொடுத்துக் கூவி அழைக்க வேண்டுமென்ற ஒரு ஊமையான துயரம் நெஞ்சைக் கவ்வ, அதை அப்படியே அமுக்கிக் கொண்டு உள்ளே வந்தான். வீட்டின் முன் அறையை நிறைத்த அந்தச் சாமான்கள் எல்லாம் அவள் வைத்த அதே இடங்களில் அப்படியேதான் இருந்தன. அன்றைய தினம் வெள்ளிக்கிழமை என்பதை நினைவூட்டும் வகையில், பூஜையறை என்ற சிறு பகுதியிலிருந்து அவளுக்குப் பிடித்தமான கஸ்தூரி வத்தியின் மெல்லிய மணம் முகத்தில் மோதியபோது, ''மாயா—மாயா—என் மாயா'' என்று அலறி அழ வேண்டும் போன்றதொரு ஆவேசமான துக்கம்.

''அம்மா! அந்த ஊதுவத்தியை ஏத்த வேண்டாம்னு சொன்னதை மறந்துட்டேளா?' ஆதங்கத்துடன் கேட்டான்.

தொப்பென்று ஆயாசத்துடன் சோபா ஒன்றின் மீது விழுந்தான். சோபா முதுகில் அழுக்குப் படர்திருக்க, மாயா தன் கையால் பின்னிய லேஸ் வைத்துத் தைத்துப் போர்த்தியிருந்த ஹெட்பீஸ் நழுவி அவன் காலடியில் விழுந்தபோது மீண்டும் ஒரு அதிர்ச்சி. குனிந்து கையில் அதை எடுத்தபோது அவன் கண் கலங்கிப் போனான்.

''உனக்கு உடம்புக்கு ஆகாத சமயம். அடிக்கடி தலை சுற்றி மயக்கம் வருகிறது. கண்ணைக் கெடுத்துக் கொண்டு இந்தத் துணியில் எம்பிராய்டரி செய்யாட்டா இப்ப யார் அடிக்கிறா?'' என்று அன்போடு கடிந்து கொண்டான், ஒரு நாள் மாலை, வீட்டுக்கு வந்தபோது.

''யாரும் அடிக்க மாட்டா. அதுவும் நீங்க உங்க விரலால் கூட என்னைத் தட்டமாட்டேள். இந்த ஹெட்பீஸ்களை அழகாச் செய்து சோபா மேலே போட்ட பிறகு சொல்வீங்க. எத்தனை அழகா இருக்குன்னு.''

உண்மையில் அவை மிகவும் அழகாக இருந்தன. அவனது புது வீட்டைப் பார்க்க வந்த நண்பர்களின் மனைவிகளின் கண்களிலிருந்து அவை தப்பவேயில்லை.

''மாயா! உண்மையா நீயா இந்த எம்பிராய்டரி பண்ணினே? ரொம்ப நல்லா இருக்கே!'' புகழாதவர்கள் பாக்கி இல்லை. அப்போதெல்லாம் அவன் பெருமையில்— மகிழ்ச்சியில் பூரித்துப் போனான்.

வீட்டை அழகாக—சுத்தமாக வைத்துக் கொள்வதில் மட்டுமா மாயா கெட்டிக்காரி?

சிக்கனமாகக் குடும்பத்தை நடத்துவதில் அவளை யாரும் மிஞ்ச முடியாது. சமையலில் ரொம்பவும் திறமைசாலி—

அலுப்பே தெரியாது. நாளுக்கு ஒரு புதுவித சமையல் செய்து, வாய்க்கு ருசியாக...வயிற்றுக்கு ஒட்டக்

கூடிய...நல்ல சத்தான சமையலைச் செய்து போட்டு அவனை எப்படித்தான் கவனித்துக் கொண்டாள்! வெறும் வத்தல் குழம்பு வைத்தால் கூட—அப்படியே தேனாக...'இன்னும் கொஞ்சம்' என்று கேட்டுச் சாப்பிடும் வகையில் சமைக்கத் திறமை இருந்தது.

அவளது அப்பா ஆரம்பத்தில் சொன்ன அத்தனையும் உண்மைதான்

''என் பொண்ணுக்குக் குடும்பத்தைச் சிக்கனமாக—சீராகக் கவனிக்கத் தெரியும். கைவேலைகள் ரொம்பவே தெரியும். சுமாராகப் பாடத் தெரியும். பெரியவர்களை ரொம்பவும் அனுசரிச்சுக் கொண்டு போகத் தெரியும். எல்லாத்தையும் விட ரொம்பப் பொறுமையானவள்—''

'டங் டங்' என்று ஆணி ஒன்றை யாரோ நெஞ்சில் அடிப்பது போல இருந்தது.

சம்பிரதாயத்திற்காக அம்மா அப்பாவுடன் பெண் பார்க்கப் போன சமயம் அவள் அப்பா சொன்னவை இப்பொழுது பேசுவது போல நெஞ்சைக் குத்தின. பொறுமையானவள் என்பது எத்தனை உண்மையான சங்கதி—

ஆஸ்பத்திரிப் பாதுகாப்பில், அவள் உடல் முக்கால் பாகமும் நெருப்புக் காயத்தில் ரணமாகி, எரிச்சலும் வேதனையுமாக உயிருக்கு அவள் துடித்துக் கொண்டிருந்த போது கூட அவனைக் கண்டதும்...அந்தக் கண்கள் பளிச் சென்று மின்னின.

''பயப்படாதீங்க! சீக்கிரம் குணமாகி வீட்டுக்கு வந்து விடுவேன்'' என்று பேசாமல் பேசிய அந்தக் கண்களில்தான் எத்தனை கனிவு! வாய் திறந்து 'அம்மா வலிக்கிறதே'' என்று ஒரு வார்த்தை அவளிடமிருந்து வரவே இல்லை. மௌனமாக அவர்கள் அனைவரையும் மென்மையாகப் பார்த்த அந்த மான் விழிகளில் நிறைந்து நின்ற பரிதாபம்...

அடக் கடவுளே! அவனுக்கு அப்படி ஒரு அதிர்ச்சியா வரவேண்டும்!

''வெள்ளிக்கிழமை—மாயாவுக்குப் பிடிக்கும்னு அந்த ஊதுவத்தியை ஏற்றினேன். இனிமேல் ஏத்த மாட்டேன். கை கால் அலம்பிண்டு வா. உன் அப்பா கிட்டேயிருந்து கடிதாசி வந்திருக்கு'' அம்மா பார்வதியின் குரல் சன்னமாக, அலுப்பாக ஒலித்தது.

மாயாவின் இறுதிக் காரியங்கள் முடிவடைந்த பின் ஒரு மாத காலம் அவனுடன் தங்கியிருந்து ஆறுதல் சொல்லி, அதிர்ச்சியால் தாக்குண்டு துயரத்தில் துடித்த மகனுக்குத் துணையாக இருந்து கொண்டிருந்தாள் அம்மா.

அப்பாவிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது என்றால்?

அம்மாவை ஊருக்குக் கிளம்பி வரும்படி அப்பா உத்தரவிட்டு எழுதி இருப்பார்!

அப்பாவானால் என்ன? பிள்ளையானால் என்ன? அவரவர்கள் சௌகர்யம் என்கிறபோது மனிதன் மிகவும் சுய நலம் உடையவனாகி விடுகிறான்!

லுங்கியும் பனியனுமாகக் குளியலறையிலிருந்து முகத்தைத் துடைத்துக் கொண்டு வெளிப்பட்டவன் எதிரே, அம்மா காப்பி டம்ளரை மேஜைமேல் வைத்தாள். அருகில் கடிதத்தையும் வைத்து விட்டு மெல்ல அப்பால் திரும்பிக் கொண்டாள்.

கடிதம் அவனுக்கு வந்திருந்தது. அம்மா பிரிக்கவில்லை. ஆனாலும் அப்பா என்ன எழுதியிருப்பார் என்பதை அவளால் ஊகிக்க முடியும். அதனால் ஏற்பட்ட வேதனையோ, சஞ்சலமோ—அம்மாவுக்கு அவனது பார்வையைச் சந்திக்கத் துணிவிருக்கவில்லை.

காப்பியை விழுங்கி விட்டு வாயைத் துண்டால் துடைத்துக்கொண்டு நிதானமாகக் கடித உறையைக் கிழித்துக் கடிதத்தை எடுத்தான். அப்பா எப்பொழுதும் சுருக்கமாக, ஆனால் அர்த்தம் நிறைந்த கடிதங்கள்தான் எழுதுவது வழக்கம்.

மாயாவைக் கல்யாணம் செய்து கொள்ளத் தீர்மானிக்கும்வரை அவன் அப்பாவுக்குக் கொஞ்சம் பயந்த பிள்ளையாகத்தான் இருந்தான். அதற்குப் பின்னர் அண்ணாவைப் போல அவனுக்கும் துணிவு ஏற்பட்டு விட்டது. பிள்ளை எங்கே தங்களைக் காப்பாற்ற மாட்டானோ என்ற திகிலில்தானே அப்பா கல்யாணத்திற்கு மறுப்புச் சொல்கிறார்?

''மாதம் ஆயிரம் ரூபாய் அனுப்பி விடுகிறேன். மீதியில் நானும் மாயாவும் கஞ்சி காய்ச்சிக் குடித்துக் கொள்வோம். உங்களை சத்தியமாக ஒருநாளும் கைவிட மாட்டேன்'' உரக்க ஆவேசமாகக் கத்தியதும் அப்பா அடங்கிப் போனார். அன்று சொன்னதை இன்றுவரை காப்பாற்றிக் கொண்டுதான் வருகிறான்.

அவனது அண்ணன் சுந்தரேசன் அப்பாவுக்குத் தன் பங்காக எவ்வளவு அனுப்பினான் என்பதைப் பற்றி அவன் கேட்கவில்லை. கேட்கக் கூடாது என்று மாயா தான் சொல்லிவிட்டிருந்தாள்.

''உங்கள் கடமையை நீங்கள் செய்து கொண்டிருங்கோ. மற்றவர்கள் செய்கிறார்களா இல்லையா என்பதைப் பற்றி ஆராய்ச்சி நமக்கு வேண்டாம். உங்[illegible] அம்மா இருவருடைய ஆசிகள்தான் நமக்கு வேணும். ம[illegible]தீங்க.'' அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தாள். மாதம் முதல் தேதி பிறக்கும் முன், ''அப்பாவுக்கு டிராப்ட் அனுப்பிடுங்கோ'' என்று நினைவு படுத்துவாள்.

பொற்றோரின் ஆசி அவளுக்குக் கிடைத்ததோ ந என்னவோ, அவள் வழிபட்ட பகவதி அம்மனின் அருளும் அ கிடைத்ததோ என்னவோ, அவள் மாயமாக ஒரே நாள் ர அவஸ்தைப்பட்டு விட்டுப் போய்விட்டாள்.

கண்ணில் மீண்டும் பனித்த கண்ணீரைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு கடிதத்தைப் படித்தான். அப்பா ஆங்கிலத்தில் எழுதியிருந்தார். அந்தக் காலத்தில் பி. ஏ. படித்தவர். பள்ளிக்கூடம் ஒன்றில் ஆங்கில ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர். ரத்தினச் சுருக்கமாகச் சொற் களை உபயோகித்து எழுதும் திறமைசாலி.

''அன்புள்ள சிவராமனுக்கு அநேக ஆசிகள்.

வீட்டில் ரத்னாவும் நானும்தான் இருக்கிறோம். அண்ணா தம் மனைவியுடன் முந்தாநாள் புறப்பட்டு பம்பாய் போய் விட்டான். கல்யாண வயதுப் பெண் ரத்னா. உலகம் ரொம்பக் கெட்டுக் கிடக்கிறது. அவளைத் தனியே வீட்டில விட்டுவிட்டு நான் வெளியே எங்கும் போக முடியாத ஒரு சிக்கலில் தவிக்கிறேன். இன்னும் இரண்டு தினங்களில் அம்மாவை செங்கோட்டா பாஸஞ்சரில் அனுப்பி வைக்க ஏற்பாடு செய். தந்தி கொடுத்து விடு. நான் ஸ்டேஷனுக்குப் போய் அவளை அழைத்துக் கொள்கிறேன். எல்லாவற்றையும் ஒரு பயங்கரக் கனவாக நினைத்து, மறந்து வாழக் கற்றுக் கொள்வதுதான் புத்திசாலித்தனம். ஆசிகள்.

அப்பா நீலகண்டன்.''

''அப்பா என்ன எழுதியிருக்கார்?'' பின்னால் மெல்ல வந்து நின்ற அம்மா பார்வதி முனகினாள்.

''அப்பா உங்களை உடனே அனுப்பி வைக்கச் சொல்லியிருக்கார். டிக்கெட் கிடைப்பது அப்படி ஒன்றும் சிரமம் இல்லை. எனக்குத் தெரிஞ்ச ஒரு

ஏஜெண்ட் இருக்கான். அவனிடம் சொன்னால் இன்னி ரயிலுக்குக்கூட டிக்கெட் வாங்கித் தந்துடுவான்.'

''ஒரு மாசத்துக்கு மேலே நானும் இங்கே உன்னோட கூடத் துணையாக இருந்துட்டேன். நடந்தது நடந்து போச்சு, அதையே நினைச்சுண்டு—''

வெடுக்கென்று கோபத்துடன் மகன் திரும்பினான். ''அவ்வளவு சுலபத்தில் மறக்கற விஷயம் இல்லையம்மா,'' ஆத்திரத்துடன் குமுறினான்.

''வேணும்னு யாராவது செய்த காரியமா? விபத்து ஏற்பட்டு விட்டது. அவளுக்கு உன்னோட வாழக் கொடுத்து வைக்கலை. அவ்வளவுதான். போயிட்டா.''

''இல்லேம்மா. எனக்குத்தான் அவளோடு வாழக் கொடுத்து வைக்கலை.''

தாய் அருகில் ஓடி வந்து புடவைத் தலைப்பால் மகனது கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்து விட்டாள்.

''ஆண் பிள்ளை துணிவை இழந்து கோழையாகி இப்படி அழலாமா? இறந்து போனவளுக்குக் காலம் வேகமாக ஓடிவிடும். கைக் குழந்தை மோகனை வச்சுண்டு தனியா நீ இனி எப்படிக் காலம் தள்ளுவே? அதனாலே...''

அவள் முடிவுக்கு முன் அழுகையும் ஆத்திரமுமாக, 'அம்மா' என்று இரைந்து கத்தினான்.

''இப்படி மனதைப் போட்டுச் சங்கடப்படுத்திக் கொண்டா போனவ திரும்பி வரப் போறாளா? எல்லாரும் ஒரு நாளைக்குப் போய்த்தான் ஆகணும். பிறந்தப்போ உலகிலே நமக்கு நிச்சயமானது மரணம் என்கிற ஒன்று தான். மாயாவுக்கு அது விரைவில் வந்துட்டது. எங்களைப் போலவாளுக்கு ஆயுசைக் கூடப் போட்டு வச்சிருக்கு விதி. யார் மேலே கோபப்பட்டு என்ன

''நீங்க சொல்றதைக் கேட்டதும் எனக்குச் சின்ன வயசில் படிச்ச ஒரு கதை ஞாபகம் வரது. அந்தக் காலத்தில் வாழ்ந்த சீனாக்காரர்களிடம் ஒரு பழக்கம் இருந்ததாம். 'இறந்து போனவன் சமாதி நன்றாகக் காய்ந்து கெட்டிப்பட்டதும் அவன் மனைவி மறுமணம் செய்துக்கலாம்' என்று சட்டம் இருந்ததாம். முதல் நாள் இறந்துபோன கணவனின் சமாதியிடம் உட்கார்ந்து ஒரு பெண் அழுதபடி விசிறிக் கொண்டிருந்தாளாம். 'இவளுக்குக் கணவன் மேல் எத்தனை அன்பு, அவன் மூச்சுத் திணறாமல் இருக்க வேண்டும் என்று சமாதியைக் கூட வீசுகிறாளே!' பார்த்தவர்கள் வியந்தார்களாம். ஒரு பெண் அருகில் வந்து அவள் அழுவதைப் பற்றி அனுதாபத்துடன் விசாரித்தாளாம்.

'சமாதி சீக்கிரம் காயணும்னு விசிறிக் கொண்டிருக்கிறேன். கை வலிக்கிறது- சமாதியின் ஈரம் சட்டுனு காயமாட்டேங்கிறது. என் காதலன் என்னைக் கல்யாணம் செய்துக்கக் காத்துத் துடிச்சுக்கொண்டிருக்கான்' என்று பதில் வந்ததாம்!''

அம்மாவுக்குத் துயரத்தின் நடுவில் கூடச் சிரிப்பு வந்தது—அதை சாமர்த்தியமாக அடக்கிக் கொண்டாள்.

''அதுபோல மாயா இறந்து ஒரு மாசம்கூட ஆகலை. அதுக்குள்ளே மறு கல்யாணத்தைப-பத்திப் பேசறதைக் கேட்கக்கூட எனக்கு அவமானமா இருக்கும்மா.''

''திரும்பிப் பார்த்தா ஆறு மாசம் முடிஞ்சுடும். அப்பா ஏற்கெனவே என்கிட்டச் சொல்லிட்டுப் போனதை இப்போ நான் சொல்றேன். எத்தனை நாளைக்கு மாயா வீட்டிலே அவ மன்னி உன் குழந்தை பார்த்துக்குவா? வந்து அழைச்சிண்டு போன்னு ஒ கடிதம் வரதுக்கு முன்னாடி நீயே போய் குழந்தைை அழைச்சிண்டு வந்துடணும்! சட்டுப்புட்டுன்னு ஒரு கல்யாணத்தைப் பண்ணிக் கொண்டால்தானே கைக்

குழந்தையைப் பார்த்துக்க ஒருத்தி பொறுப்போட வீட்டில் இருப்பா! லதாவை ஏற்கெனவே உனக்காக நாங்க பார்த்திண்டு இருந்தோம். நீதான் ஒரே பிடிவாதமா ஒதுக்கினே. இப்போ பார், உனக்கும் அவளுக்கும்தான்னு முடிச்சுப் போட்டு வச்சிருக்கு. நடுவிலே ஒரு சொப்பனம்போல வந்துட்டுப் போயிருக்கா மாயா.''

'அம்மா! எனக்கு இப்போ இதெல்லாம் கேட்கப் பிடிக்கலை.''

''நாளைக்கு மாயாவின் அண்ணாகிட்டேயிருந்து ஒரு கடிதம் வந்தா என்ன செய்யப் போறே?''

''அதுக்கு முன்னாடியே மோகனை நான் போய் கூட்டிக் கொண்டு வந்து இங்கே வச்சுக்கப் போறேன்''

''நீ உன்னைக் கவனிச்சுப்பியா? இரண்டு வயசுக் குழந்தையைக் கவனிப்பியா? உன் வேலையைக் கவனிப்பியா?''

''எல்லாத்தையும் கவனிக்கணும்னு சுமையாப் பொறுப்பு என் தலைமேலே விழுந்திடுச்சு. எப்படியோ கவனிச்சுப்பேன்.''

''உளறாதே, ஒரு குழந்தையை வளர்த்து ஆளாக்கறது லேசான காரியம் இல்லே''

''தெரியும், அதை அனுபவிக்கத் துணிஞ்சுட்டேன்.''

அப்போதுகூட அம்மா சொல்லவில்லை. 'நான் பேரனை எடுத்துக்கொண்டு ஊருக்குப் போகிறேன். அவனுக்கு விஷயம் தெரிகிறவரை என்கிட்ட வளரட்டும்' என்று சொல்லத் தயக்கம். அப்பாவுக்கு அவன் செய்து கொண்ட காதல் கல்யாணத்தின் மீது கோபம். அது ஆறும்முன் மோகன் பிறந்துவிட்டான். அதனாலோ என்னவோ அண்ணாவின் குழந்தைகளைக் கொண்டாடு

வதுபோல அப்பா அவனது மகனைக் கொண்டாடிய தில்லை. ஒரே ஒரு தடவை ஒப்புக்குத் தூக்கிக் கன்னத்தில் ஒரு முத்தமிட்டதுடன் சரி. அதற்குப் பின் அவர் விரலால் கூட அவன் குழந்தையைத் தொட்டதில்லை. மாயா மீது அவருக்கிருந்த வெறுப்பை அப்படிக் காட்டினார் மோகன் மீது. அவரா இப்போது இரக்கப்பட்டு மோகனைக் கூட எடுத்து வரும்படி அம்மாவுக்கு உத்திரவு இடுவார்? அவரைக் கேட்காமல் அம்மா எந்தக் காரியத்தையும் அவள் வாழ்க்கையில் துணிவுடன் செய்ததில்லையே! அவளை நொந்து கொள்வதில் பயன்?

"உங்களுக்கு மோகன் வளர்ச்சியில் எத்தனை பொறுப்பு இருக்கோ, அதே பொறுப்புத்தான் என் மறுமணத்தைப் பற்றியும் இருக்கே! அதனால் நீங்க அதைப் பற்றித் தீர்மானிக்கத் தேவையில்லை."

"என்னடா இப்படிப் பேசறே", அம்மா தழுதழுத்தாள்.

"இன்னொரு கதையின் ஞாபகம் வரது. இன்னிக்கு எனக்கு ஏனோ பல கதைகள் நினைவுக்கு வருகின்றன. வீட்டையும் பெற்றோர்களையும் அக்கறையோடு கவனித்துக் கொண்டானாம் மூத்த பிள்ளை. இளையவன் வீட்டைவிட்டு ஓடிப் போய் விட்டானாம். பல ஆண்டு களுக்குப் பின் வீட்டைத் தேடிக்கொண்டு வந்த அந்தப் பிள்ளையைக் கண்டதும தந்தை அவனுக்காகக் கொழுத்த ஆட்டை வெட்டி, விருந்து சமைக்க ஏற்பாடு பண்ணிப் பலத்த வரவேற்புக் கொடுத்தானாம். இப்படி பைபிளில் ஒரு கதை. 'தி பிராடிகல் ஸன்' என்பார்கள்."

"என்ன சொல்ல இப்படிச் சுத்தி வளைக்கிறே?"

"அண்ணா சுந்தரேசன் என்றாலே அப்பாவுக்கு ஒரு தனிப் பிரீதி. ஏன்னா அவன் உங்க மூத்த பிள்ளை. அவன் என்ன செஞ்சாலும் தப்பு இல்லை. நான் எது செய்தாலும் தப்பு."

''ஏண்டா சிவா இப்படிப் பேசறே? எங்களுக்கு இரண்டு பேரும் ஒரே சமம்தாண்டா !''

''அம்மா, இந்த மழுப்பல் எல்லாம தேவையில்லை. மன்னிக்கு ஒரு சிறு ஆபரேஷன் என்றபோது எப்படி அலறியடிச்சுண்டு பம்பாய்க்குப் போனேள் ! அந்தச் சின்ன ஃபிளாட்டுக்குள்ளே, பாஷை தெரியாத ஊரிலே எப்படியோ மூணுமாசம் கூட இருந்து உதவிட்டு வந்தேள். அப்போ மட்டும் ரத்னா கல்யாணத்துக்கு இருக்கலையா? உலகம் அப்போ மட்டும் ரொம்ப நல்லதாக இருந்ததா? பரவாயில்லை. நீங்க நாளை மறுநாள் ஊருக்குக் கிளம்பலாம். நான் இப்பவே என் சினேகிதனுக்கு போன் பண்ணி டிக்கெட்டுக்கு ஏற்பாடு பண்ணிடறேன். அப்பா வுக்குத் தந்தியடிச்சுடறேன்.''

''ரொம்ப விட்டேத்தியாப் பேசறியேடா. நான் என்ன பண்ணுவேன் ?''

''மாயா போன பிறகு விரக்தி ரொம்பவே மனசில் வந்து குடி கொண்டிருக்கு. என்ன பண்றது ? எல்லாரை யும் போலச் சட்டுனு என்னால் சில நினைவுகளை மறக்க முடியலை.''

''எழுந்திரு. ஏதாவது சாப்பிடு. பசியா இருப்பே.'' அம்மா பரிவுடன் சொன்னபோது அவனுக்குள் ஆத்திரம் மூண்டு கொண்டு வந்தது.

''என் பசி அவளோட போயிடுத்தும்மா. இப்போ வெறுமனே உலகத்துக்காக, உங்களுக்காகச் சாப்பிடறேன் அவ்வளவுதான் அதுக்குள்ளே எனக்குச் சாப்பாடு வேண்டாம். கொஞ்சம் வெளியிலே கடைத்தெரு வரைக் காலாரப் போய்ட்டு வரேன். பிறகு சாப்பிடலாம்.'' விருட்டென்று எழுந்து வெளியே கிளம்பினான்.

''ரொம்ப நாழி வெளியிலே சுத்திண்டு இருக்காதே.'' அம்மாவின் குரல் காற்றோடு கலந்து மெல்லக் காதில் விழுந்தது.

இனி தினமும் அவன் வெளியே வெகுநேரம் சுற்றிக் கொண்டுதான் இருக்கப் போகிறான். தோளில் மோகனைத் தூக்கிக் கொண்டு, கடைத்தெருவில் அவனுக்கு வேடிக்கை காட்டியபடி கடந்த காலத்துடன் உறவாடிக் கொண்டு, 'மாயா! ஏம்மா என்னை விட்டுட்டுப் போனே? உனக்கு நான் என்ன குறை வச்சேன்?' என்று தன்னுள்ளே கேட்டபடி, கண்களிலிருந்து புரண்ட கண்ணீர் கன்னங்களில் கோடிட, யாரையும் பார்க்க மனமில்லாதவனாக அவன் வெளியே நடைபாதை மீது ஒரு வேகத்திலே நடந்து கொண்டிருப்பான்!

## 2

அம்மாவை ரயிலில் ஏற்றிவிட்டு வீடு திரும்பினான் சிவராமன்.

பின்னால் நிழல் போல ஊர்ந்து கொண்டிருந்த அவளும் இல்லாது வீடு வெறுமையாக இருந்தது.

அமைதியான சூழ்நிலை மனதிற்கு இதமானதொரு உணர்வைத் தரும் என்பது உண்மை. ஆனால் அமைதிக்கும் தனிமைக்கும் ரொம்ப வித்தியாமிருக்கின்றதே!

தனிமை மனிதனின் முதல் எதிரி...யார் சொன்னது? டால்ஸ்டாய் மகான் கூறியது என்று நினைவு.

மாயா இல்லாது ஏற்கனவே வெறிச்சோடி விட்டிருந்த அந்த வீட்டில், மெல்லக் காலடி வைத்து வளைய வந்து கொண்டிருந்த அம்மாவும் இல்லாதது மிகவும் வெறுமை

யாகி, இருளில் மூழ்கிக் கிடந்த முன் அறைக்குள் நுழைந்த போது அவன் மனம் சுக்காக உடைந்து விடும் போலத் துயரத்தில் தவித்தது.

''சமைத்து வச்சிருக்கேன்—சூடா இருக்க ஹாட்கேசில் போட்டு வச்சிருக்கேன். எடுத்து போட்டுண்டு சாப்பிடு. பட்டினி கிடக்காதே. உன் உடம்பை நீதான் பார்த்துக்கணும்.'' அம்மா வண்டி புறப்படு முன் பல முறை சொன்னாள்.

காரில் கடற்கரை ஓரமாக மெல்ல நகர்ந்தபடிப் பொழுதை வீணாக்கி விட்டு வெகுநேரம் சென்ற பின்னர் தான் அவன் வீடு திரும்பியிருந்தான்.

நடையில் மட்டும் ஜீரோ வாட் பல்ப் எரிந்து கொண்டிருந்தது.

''மின்விசைத் துண்டிப்பு. அதனால் நாம் கண்டிப்பாக இருக்கணும்.''

மாயா தான் இறப்பதற்குச் சில தினங்களுக்கு முன் நடையில் எரிந்த நாற்பது வாட் பல்பைக் கழற்றச் செய்து அதைப் போட வைத்தாள்.

முன் அறைக்கும் சாப்பாட்டு அறைக்கும் சேர்த்து வெளிச்சத்தை உமிழ்ந்த குழல் விளக்கைப் பொருத்தி விட்டுக் கைகளைக் கழுவிக்கொண்டு வந்து மேஜையருகே உட்கார்ந்தான்.

சில நாட்களுக்கு முன்னர் அவன் பெரிதாக்கிச் சட்டமும் கண்ணாடியும் போட்டு அழகாகச் சாப்பாட்டு அறைச் சுவரில் மாட்டியிருந்த போட்டோவிலிருந்து மாயா அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு அம்மா வைத்துப் போன ஹாட் கேசை மெல்லத் திறந்து அதற்குள்ளிருந்த சிறு ஸ்டீல் டிபன் செட்டை எடுத்தான்.

அடிப் பாத்திரத்தில் சாதமும், அதற்கு மேல் முருங்கைக்காய் சாம்பாரும், மூன்றாவது மேல் பாத்திரத்தில் கொஞ்சம் கொத்தவரங்காய் கறியும்,மேலே இருந்த தட்டில் ஒரு துண்டு எலுமிச்சம் பழ ஊறுகாயும் வைத்திருந்தாள். ஃபிரிஜ்ஜைத் திறந்து தயிர்ப் பாத்திரத்தை எடுத்து அருகில் வைத்துக் கொண்டான்.

சாதத்தைக் கரண்டியால் அள்ளி அம்மா வைத்திருந்த தன் ஸ்டீல் தட்டில் போட்டுக் கொண்டு கொஞ்சம் கறியை எடுத்து வைத்துக் கொண்டான். முருங்கைக்காய் சாம்பாரை ஒரு கரண்டி எடுத்துச் சாதத்தில் ஊற்றியதும் திடீரென்று அந்த நினைவு நெஞ்சை அடைத்தது.

மாயா இறப்பதற்குச் சில நாட்களுக்கு முன் நடந்த சிறு சம்பவம். ஆனாலும் மறக்க முடியாமல் பச்சா தாபத்தினால் அவனைத் தினமும் துடிக்கச் செய்த நிகழ்ச்சி.

ஞாயிற்றுக் கிழமைகளில் இரவு வேளையில்தான் மாயா சம்பிரதாயமாக, பொறுமையாக, விதம் விதமாகச் சமைத்து வைத்திருப்பாள்.

சினிமாவோ, டிராமாவோ பார்த்துவிட்டு வீடு திரும்பியதும் ஹாட் கேஸிலிருந்து சூடாகச் சாப்பாட்டை முதலில் அவனுக்குப் பரிமாறி விட்டு,குழந்தை மோகனுக்கு உணவளித்துத் தூங்கச் செய்துவிட்டுப் பின்னர்தான் வந்து உட்காருவாள்.

சில சமயம் அவள் வரும்வரை சாப்பிடாது அவன் காத்திருப்பான்.

அன்று முருங்கைக்காய் சாம்பார். மணம் மூக்கைத் தூக்கியது. ''இன்னும் கொஞ்சம் போட்டுக்கோங்கோ'' என்று உபசரித்தபடி ஒரு கரண்டியால் சூடான சாம்பாரை முகந்து சாதத்தின் மீது வார்த்தாள். பிசைந்து வாயில் போட்டுக் கொண்டான். உண்மையில் சாம்பார் ரொம்ப ருசியாகவே இருந்தது.

பேச வாயெடுக்கு முன் அவள் பேசினாள்.

''அப்பாவுக்கு அனுப்ப வேண்டிய டிராஃப்டை நேற்றுத் தபாலில் அனுப்பியாச்சல்லவா? தேதி இன்னிக்கு ஐந்தாச்சே! அதனாலே கேட்டேன்.''

சோபா செட் இத்யாதிகள் வாங்கிய கடன் மீதமிருந்ததை அடைத்ததில் அப்பாவுக்கு ஆயிரம் ரூபாய் அனுப்ப முடியவில்லை. அடுத்த வாரம் பார்த்துக் கொள்ளலாம் என்று இருந்து விட்டான்.

''பணம் இல்லை. அனுப்பலை.'' சாதத்தை விழுங்கிய படி பதிலளித்தான்.

''என் கிட்டே கேட்டிருந்தால் துண்டு விழும் அந்தப் பணத்தை என் சேவிங்ஸிலிருந்து கொடுத்திருப்பேனே!''

''பெரிய கோடீஸ்வரி! பாங்க் அக்கௌண்ட் எக்கச்சக்கமாக வைச்சிருக்கே! கொடுத்துடுவே!''

மாயாவுக்கு அந்த வார்த்தைகள் சுருக்கென்று பட்டு விட்டது.

''நான் ஒரு சாதாரணக் குடும்பத்தைச் சேர்ந்தவள்னு தெரிஞ்சுதானே—'' மேலே பேச முடியாது துக்கத்துடன் அவனை வெறித்தாள்.

அந்த வீட்டில் குடிவந்த பின்னர் முதலாவதாக அவர்கள் போட்ட மும்முரமான சண்டை அது.

கணவன் மனைவியான பின் அவர்களுக்குள் ஆயிரம் தர்க்கம் வந்திருக்கிறது. அவை எல்லாம் அர்த்தமற்றவை. ஆனால் அன்று அவனுக்கு ஏனோ ஒரு வெறி—அண்ணா மீது மனத்தாங்கல்....அட்டை போல் பணத்தை மாதா மாதம் உறிஞ்சிவிடும் அப்பா மீது ஆத்திரம்.

அதற்கு அவனது மனைவி வேறு சிபாரிசு என்ற சீற்றம்.

''இதோ பார் மாயா! நீ உண்மையைத் தெரிஞ்சுக்கறது ரொம்ப அவசியம். உன் மாமனாருக்கு நீ வேண்டாத மருமகள்: வரதட்சணையுடன் க்யூவில் வந்து நின்ற பெண்களைத் தள்ளிட்டு உன்னைக் காதல் என்கிற காரணத்தில் நான் கல்யாணம் பண்ணிக் கொண்டேன் என்கிறதுக்கு என் அப்பா என்னைப் பழி வாங்குகிறார்.''

''என்னைக் கல்யாணம் செய்து கொண்டதுலே இந்த அவஸ்தை உங்களுக்குன்னு சொல்லத்தானே ஆரம்பிச்சேள்?'' குபீரென்று எழுந்து—தட்டிலிருந்த கையை உதறிக் கொண்டு—அப்பால் போய் விசும்பத் தொடங்கினாள்.

''எனக்குத் தெரியும்—நீங்க முன் போல இல்லை—எதற்கெடுத்தாலும் எரிஞ்சு விழறேள். ஏழைப் பெண்ணைக் கல்யாணம் செய்துண்டு பணத்துக்குத் திண்டாடறமேன்னு உங்களுக்கு....உள்ளூர....''

''ஷட் அப் மாயா! நான் சொல்ல வந்தது வேறே. நீ பேசறது வேறே—''

''இல்லை. எனக்கு நன்னாவே தெரியும். நாலு நாளைக்கு முன்னால் என்னைக் கொஞ்சம் கடைத்தெரு வரை காரில் அழைச்சிண்டு போய்ட்டு வாங்கன்னு கேட்டதுக்கு எப்படி எரிஞ்சு விழுந்தேள்—''

''அம்பத்தூர் வரை இரண்டு தடவை வெய்யிலில் காரை ஓட்டிக்கொண்டு என் கம்பெனி பாஸோட போய்,

தொழிற்சாலை முழுவதும் சுத்திப் பார்த்துட்டு—களைச்சுப் போய் வீடு வந்த சமயம் நீ கேட்டே...நான் என்னையறியாமக் கத்திட்டேன்...''

''இப்ப யோசிச்சு இப்படி ஒரு கதை ஜோடனை பண்ணியிருக்கேள்.''

அதற்குமேல் அவனால் தாங்க முடியவில்லை. அன்று பகல் அப்பாவிடமிருந்து வந்த ஆத்திரமிக்கக் கடிதத்தைப் பற்றி அவன் அவளிடம் சொல்லவில்லை.

''உன்னை நம்பிக் கொண்டு பின்னால் இடிந்திருக்கும் கொல்லைச் சுவரைப் புதுப்பிக்க ஏற்பாடு செய்து விட்டேன். மாதம் முதல் தேதி வந்து விடும் பணம்—இப்போ சில தடவைகளாக—இரண்டு மூன்று தேதிகளுக்கு மேல் தாமதமாகிறது. ஒரு சமயம் அனுப்புவதை நிறுத்தி விடலாம் என்ற யோசனையா? சொல்லிக் கொடுக்க வீட்டில் ஒரு மதிமந்திரி இருக்கும்போது—'' அதற்குமேல் படிக்கப் பிடிக்காமல் கடிதத்தைச் சுக்கலாகக் கிழித்து அலுவலகக் குப்பைக் கூடையிலே போட்டுவிட்டு வந்திருந்தான். ஒவ்வொரு முறையும் தமது இரண்டாவது மகனின் மனைவியைக் குறை கூறாது அப்பா கடிதம் எழுதியதே இல்லை....

அதைத் தெரிந்து கொள்ளாது இந்த அசட்டுப் பெண் மாமனாருக்குப் பரிந்து பேசியதை அவனால் பொறுக்கவே முடியவில்லை.

''அழறதை நிறுத்திட்டு இப்ப இங்க வந்து உட்கார்ந்து சாப்பிடப் போறியா, இல்லாட்டா...''

விசும்பியபடி அவள் தலையை அசைத்ததும் கோபம் தாங்காது சாப்பாட்டுத் தட்டை அவன் வீசி எறிந்து அவளைத் திகைப்படையச் செய்தான். ''இங்கே இப்ப வரியா—இல்லாட்டா—'' என்று அவன் அவள் கையைப்

பற்றி அழைத்து உட்கார வைக்க நெருங்கியபோது அவள் திடீரென்று கலவரத்தில் கிரீச்சிட்டு அலறி, "என்னை அடிக்காதீங்க... நான்... நான்" என்று கூறியபடி அப்படியே சுருண்டு மயக்கமாக விழுந்த போதுதான் அவன் திரும்ப மனிதனாகி சுயப்ரக்ஞை அடைந்தான்.

"மாயா! உனக்கு என்னம்மா வந்துட்டது?" அரண்டு போய் அவளை அள்ளிக் கொண்டு சென்று படுக்கை மீது கிடத்தி, அவசரமாகச் சமையலறை அலமாரியிலிருந்து தம்ளர் ஒன்றை எடுத்து, கொஞ்சம் நீரில் குளுகோசைப் போட்டுக் கலக்கி எடுத்து வந்து... அவளது முகத்தை தன் கைக்குட்டையால் துடைத்து, ஸ்பூனில் கொஞ்சம் குளுகோஸ் தண்ணீரை எடுத்து மெல்லப் பற்களிடையே கொட்டி, "மாயா! மாயா! கண்ணை முழிச்சுப் பாரு" என்று அவன் பட்ட பாடு!

மெல்ல விழித்த மாயாவின் கண்களில் நீர் புரண்டது.

"இன்னிக்கு டாக்டர் ரேவதியைப் போய் பார்த்துட்டு வந்தேன். இரண்டு மாசம் கர்ப்பம்னு சொன்னா. அதனாலே கோபத்திலே நீங்க அடிச்சுட்டா—" திணறினாள் அவள்.

"அடப் பைத்தியமே! என்னிக்காவது நான் உன்னை விரலால் தொட்டிருக்கேனா? அப்படிப்பட்ட கிராதகனா நான்? உன்னை சாப்பிடக் கூட உட்கார வைக்கணும்கிற ஆத்திரத்திலே உன் கையைப் பிடிக்க வந்தேன். என்னைத் தப்பாப் புரிஞ்சுண்டிட்டியே!" கண்ணீரைத் துடைத்து விட்டு எத்தனை வார்த்தைகள் கனிவாகப் பேசிச் சமாதானம் செய்தான்!

அன்று இரவு வெகு நேரத்திற்குப் பின் அவன் கையை மெல்லத் தொட்டபடி அருகில் படுக்கையில் புரண்ட மாயா மெல்லியதாக அவன் காதுகளில் கிசுகிசுத்தாள்.

''மோகனுக்குப் பிறகு இரண்டாவதாகப் பிறக்கப் போவது ஒரு பெண்ணாக இருக்கணும்னு எனக்கு ஆசையா இருக்கு.''

''எனக்கும் பெண்தான் வேண்டும்ன்னு ஆசையாக இருக்கு.''

''ஆமாம் என்ன பேர் வைக்கலாம்?''

''உனக்கு என்ன பேர் பிடிச்சிருக்கோ அதை வைக்கலாம். உனக்குத்தான் முதல் அனுமதி.''

''சாஸ்திரத்துக்கு உங்க அம்மா பேர் வச்சுட்டு—''

''ரொம்பக் கர்நாடகமான பேர் வேண்டாம்.''

''பள்ளிக்கூடத்திற்கும் நாம் கூப்பிடறதுக்கும் சின்னதா அழகா ஷைலான்னு வைக்கலாமா ?''

''நீ பலே ஆசாமி. பேர் வரை தீர்மானிச்சிட்டு மெல்ல என்கிட்ட சம்மதம் கேட்கிறே. நாட் பாட்'' சிரித்தான்.

''உங்க கிட்ட கேட்காம நான் இதுவரை எதையாவது செய்திருக்கேனா ? சொல்லுங்கோ'' கொஞ்சலுடன் அவள் மிகவும் நெருக்கமாகக் காதருகே கிசுகிசுத்தபோது, 'இந்த மாயாவுக்கு, அன்பின் சிகரமான இவளுக்குக் கணவனாக இருப்பது எத்தனை பெரிய பாக்யம். இனி மேல் குழந்தையைப் பெற்று உடம்பு தேறும் வரை விளையாட்டுக்குக் கூட வெறும் தர்க்கத்துக்குக் கூட, இவள் மனம் நோகறாப்பல எதுவுமே சொல்லக் கூடாது' என்று மனதிற்குள்ளே தீர்மானித்துக் கொண்டான். ஆனால் அன்று இரவும் அதற்குப்பின் பல நாட்களும்— அவளுடன் அன்று வீணாகப் போட்ட சண்டை மிகத் தவறான காரியம—அதுவும் கர்ப்பமாக இருப்பவளிடம் கண்டபடி இரைந்து கத்தி அதிர்ச்சியூட்டிப் பயமுறுத்தி விட்டது ரொம்பவும் பிசகான காரியம் என்று மனதை

உறுத்தியது உண்மை. ஒரு நாள் பொறுக்க முடியாது டாக்டர் ரேவதியையே அலுவலகத்திலிருந்து தொலை பேசி மூலம் கேட்டு விட்டான்.

''வளரும் குழந்தைக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்து விடுமா டாக்டர்? வேலைப் பளுவில் ஏற்பட்ட இறுக்கம் வீட்டுக்கு வந்ததும் கத்தி விட்டேன். அவள் பயந்து மயங்கி விழுந்து விட்டாள்.''

''மாயா நேற்று என்னிடம் வந்திருந்தாள்—அவள் உடல் நிலையில் எந்தவிதக் கோளாறும் இருக்கவில்லை—கவலைப்பட வேண்டாம்.''

''சாதாரணமாக மாயா ரொம்பப் பொறுமைசாலி.''

''இருக்கலாம். பெண்கள் கர்ப்பமாக இருக்கும்போது உடலில் சில மாற்றங்களால் குணத்திலும் கொஞ்சம் வித்தியாசப்படுவார்கள், திடீரென்று கோபம் வரும்—எரிச்சலாகப் பேசுவார்—இதெல்லாம் ரொம்ப இயற்கை. பிரசவித்த பிறகு பழைய நிலைக்கு வந்துவிடுவார்கள்.''

''மாயாவைக் கொஞ்சம் கூடுதலாகக் கவனிச்சுக் கோங்க டாக்டர். இது அவளுக்கு இரண்டாவது குழந்தை.''

''மிஸ்டர் சிவராமன். தாய்மை என்பது ஒரு வியாதி இல்லை. அதனால் கவலைப்பட வேண்டாம். மாயா என்னுடைய பேஷன்ட், அவளை நான் கருத்தோட கவனிச்சுப்பேன். ஓ. கே?''

அதற்குப் பின்னர் அவன், தான் செய்த பிசகிற்குப் பிராயச்சித்தம் செய்வது போல, தினமும் வேலையி லிருந்து திரும்பி வரும்போது ஒரு முழம் மல்லிகையும், அவளுக்குப் பிடித்தமான பேல்பூரி, சமோசா, கிரீம் பிஸ்கட், சாக்லெட் என்று ஏதாவது ஒன்றை வாங்கிக் கொண்டு வருவான்.

''இந்த வீட்டில் மோகன் குழந்தையா, நான் குழந்தை யான்னு தெரியலை.'' கண்களை இடுக்கிக்கொண்டு சிரித்த படி அவைகளை அவள் பெற்றுக் கொள்ளும்பொழுது அவனுள் ஏற்பட்ட பரம திருப்தியைச் சொல்லில் வருணிக்க முடியாது.

அன்று காலை அவன் வேலைக்குக் கிளம்பும்போது அவளிடம் சொல்லிவிட்டுத்தான் போனான்.

''சாயங்காலம் நாம் மூவரும் ஒரு சினிமாவுக்குப் போகப் போறோம். அதனால் நீ இரவுச் சாப்பாட்டுக்கு எதுவும் சமைக்க வேண்டாம். திரும்பி வரும்போது ஏதா வது ஹோட்டலில் நாம் சாப்பிட்டுக் கொள்ளலாம்.''

''என்ன படம்னு சொன்னாத் தேவலையே!''

''மோகனை எடுத்துண்டு போகப் போறாம்னாலே ஊகிச்சுக்கணும். ஏ படம் இல்லை.''

''சினிமாக் கொட்டகையிலே போய் வேர்த்து விறு விறுத்துக்கொண்டு இருக்கணுமா? சிவனேன்னு குழந்தை யோட கொஞ்ச நேரம் காத்தாட பீச்சிலே உட்கார்ந் துட்டு வரலாமே!''

''உன்னை சினிமாக்கு அழைச்சிண்டு போய் ரொம்ப நாளாச்சுன்னு மனத்தில்பட்டது—டிக்கெட்டுக்கு ஏற்பாடு செய்துட்டேன். ப்ளீஸ், எனக்காகவாவது நீ இன்னிக்கு என்னோட பார்க்க வரப்போறே.''

''ஓ. கே. பாஸ்.'' கைகள் இரண்டையும் கூப்பிப் போலியாகத் தலையைக் குனிந்து வணக்கம் செய்வது போலச் சைகை செய்து சிரிப்பூட்டினாள்.

சிரித்துக் கொண்டே காரில் ஏறினவன், சட்டென்று காரை நிறுத்தி விட்டு இறங்கி உள்ளே வந்தான்.

''மோகம் முப்பது நாள் என்பாங்க. உன் மேல் ஏற்பட்டிருக்கும் மோகம் மூவாயிரம் வருஷத்துக்கும் என்னை ஆட்டிப் படைக்கும் போலிருக்கு. உன்னோட பேசிச் சிரிச்சு மகிழ்ந்து போன மயக்கத்திலே முக்கியமான காகிதங்கள் வச்சிருக்கிற ஆபீஸ் பைல்கள் கொண்ட பிரீப்கேசை வச்சுட்டு மறந்து போயிட்டேன்.''

''உண்மை அதுதானா?'' கேட்டபடி ஓடிச் சென்று மேஜை மீது வைத்திருந்த அவனது அலுவலகப் பெட்டியைத் தூக்கி வந்து கொடுத்தாள்.

வாயிலைத் தாண்டி வெளியே படிவரை அவள் கூட வந்து விட்டாள்.

அவளது பட்டுக் கன்னத்தைத் தொட்டு விளையாட்டாகக் கிள்ளி, ''இல்லை, உன்னை மறுபடியும் பார்க்கணும்னு ஆசையா இருந்தது. அதனால் வந்தேன். ஆபீஸ் பைல் அப்படி ஒண்ணும் தலை போகிற விசேஷ சங்கதி இல்லை'' என்று வேடிக்கையாகப் பேச நா துடித்தது, கை பரபரத்தது. எதிர் ஃபிளாட்டிலிருந்து மாக்ஸியில் ஓடிவந்த ஒரு சிறுமி, ''ஹலோ! ஆண்ட்டி'' என்று கூறி விட்டு வேகமாக தார் பாதையில் சாலையை நோக்கி ஓடினாள்.

''பத்திரம், தெருவைத் தாண்டும்போது ஜாக்கிரதை. போக்குவரத்து எக்கச்சக்கமாக இருக்கும்'' என்று கூறிக் கொண்டே பின்னால் வந்த அந்தச் சிறுமியின் தாயைப் பார்த்ததும் அவன் சட்டென்று மனைவிக்குக் கையை உயர்த்தி 'டாடா' சொல்லிவிட்டு, ''மோகன் தூங்கி எழுந்ததும் எனக்காக அவனுக்கு 'டாடா' சொல்'' என்றபடி காரில் ஏறி உட்கார்ந்தான்.

அதுதான் கடைசியாக அவளிடமிருந்து அவன் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டது. அதற்குப் பின்னர் வாசல் வரை வந்து வழிவிட அவள் இருக்கவில்லை.

மறுபடியும் அவளை அந்த நிலையில் பார்க்க மாட்டோம் என்ற உள்ளுணர்வின் எச்சரிக்கையினால் தானா அன்று அவன் ஏறிய காரிலிருந்து இறங்கி மறுபடி உள்ளே ஓடி வந்தான்?

இரண்டு வாயுடன் சாப்பாட்டை முடித்துக் கொண்டு எழுந்தான்.

கையைக் கழுவிக் கொண்டு வந்து, மீதமாகி விட்ட சாப்பாட்டைப் பாத்திரங்களுடன் தூக்கி ஃபிரிஜ்ஜுக்குள் வைத்துச் சாத்தினான்.

வாயிற்கதவை உட்புறமாகப் பூட்டி விட்டு, முன்னறை விளக்கை அணைத்து விட்டுப் படுக்கையறைக்குள் வந்து மெத்தை மீது சரிந்து கொண்டான்.

கணவன் மனைவி இருவரும் படுக்க உபயோகிக்கும் அகலமான ஒரே மெத்தை விரித்த கட்டில் அது.

''உங்களை விட்டு நகராது எப்பவும் அருகில் இருக்கணும் என்பதற்காகத் தனித்தனியான கட்டில்கள் வாங்காது இந்தப் பெரிய கட்டிலை மெத்தையோடு வாங்கினேன்'' என்று முதல் நாள் அதை ஆட்கள் சிரமப்பட்டு அந்த அறைக்குள் குறுக்குவாட்டில் வைத்து எடுத்து வந்து போட்டபோது மெல்லச் சிரித்தாள்.

அவனையுமறியாது அவனது கரம் அருகிலிருந்த வெற்றுத் தலையணையை மெல்லத் தடவியது.

'என்னைவிட்டு நகர மாட்டேன்னு சொன்னியே மாயா! ரொம்ப தூரம், நான் வர முடியாத இடத்துக்கு நகர்ந்து போயிட்டியே! ஏமாத்திட்டியே மாயா!' திடீரென்று எழுந்து உட்கார்ந்தவன் கால் மூட்டின் மீது தலையைச் சாய்த்துக் கொண்டு குலுங்கி அழுதான். ஆற்றுவார் இன்றி தனிமையில் பொங்கியழுதான், வெகு நேரம் அழுது கொண்டே யிருந்தான்.

# 3

**வா**யில் அழைப்பு மணி அழுத்தமாக ஒலித்தது. திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தான் சிவராமன். சூழ் நிலையை உணர்ந்து கொள்ளச் சில நொடிகள் சென்றன.

ஆமாம்! அம்மாவும் ஊருக்குப் போய் விட்டாள், இப்போது அவன் தன்னந்தனியாக அந்த ஃபிளாட்டில் இருக்கிறான்.

வாசலில் விட்டு வேலைக்காரி முத்தம்மா பால் பாக்கெட்டுடன் பல வீடுகளுக்கும் போக வேண்டுமே என்ற நிர்பந்தத்தில் அவசரப்பட்டாள்.

கண் இமைகள் நெருப்பாக எரிய, வேதனையுடன் போர்வையை உதறி விட்டு வேகமாக எழுந்து சென்று கதவைத் திறந்தான்.

''ரொம்ப நேரமா மணியை அடிச்சிட்டு இருக்கேன். நல்லாத் தூங்கிட்டிங்க போலிருக்கு. இதைப் புடிங்கோ— மத்த வீடுகளுக்கும் கொடுத்துட்டு வேலை செய்ய ஓடியாறேன்.''

நான்காண்டுகளாக வேலை செய்கிறவள் முத்தம்மா— நம்பிக்கைக்கு உலகந்தவள்தான் — அந்த விபத்திற்குப் பின்னர் அவளுக்கு அவன் மேல் ரொம்பவே அனுதாபம்.

குளித்து விட்டு வேட்டியும் பனியனுமாக அவன் சமையலறைக்குள் புகுந்தான்.

அம்மா பார்வதிக்கு சுத்தமாகவே காரியங்கள் செய்யத் தெரியாது. கணவனைக் கைப்பிடித்த காலத்திலிருந்து பயந்து—நடுங்கி, அவசரப்பட்டு வீட்டு வேலைகளைத் துரிதமாக முடிக்கக்கற்றுக் கொண்டவள். அதன் பயனாக

அவன் வீட்டுச் சமையலறை அலமாரியில் சாமான்கள் தாறுமாறாக வைக்கப் பட்டிருந்தன.

மாயா சமையலறையைக்கூடப் படுசுத்தமாக,நேர்த்தியாக, சாமான்கள் இருக்க வேண்டிய இடத்தில் வைத்திருப்பாள்.

நல்ல வேளை. அம்மாவின் ஒரு மாத கால ஆட்சி அந்த அறையோடு அடங்கிப் போனது. இல்லாவிட்டால், முன்னறை, படுக்கையறை முதலியவற்றிலிருந்த சாமான்கள் கூட இடம் பெயர்ந்திருக்கும். அந்த மாற்றத்தை அவனால் தாங்கிக்கொள்ள இய்லாது.

காப்பி பில்டரை அந்தக் கலவைக் கூட்டத்தில் தேடிப் பிடித்து, தண்ணீரைக் கொதிக்க வைத்து, டிகாக்ஷன் போட்டு, பாலைக் காய்ச்சி வேண்டிய அளவு தனக்கும் முத்தம்மாவுக்கும் காப்பி கலந்து கொள்வதற்குள் அவனுக்கு நேரம் ஒரு யுகமாகத் தெரிந்தது.

காப்பி டம்ளருடன் சாப்பாட்டு அறை நாற்காலி ஒன்றில் உட்கார்ந்தான்.

காப்பி ருசிக்கவில்லை. அவனுக்குக் காப்பி போடக் கூடத் தெரிந்திருக்கவில்லை. அந்த ஃப்ளாட்டுக்குக் குடி வந்த புதிதில் நண்பர் ஒருவருடைய இல்லத்தில் வீடியோவில் படம் பார்க்க அவனுக்கு அழைப்பு வருவதுண்டு.

தூங்கும் குழந்தையைத் தோளில் போட்டுக்கொண்டு வீட்டைப் பூட்டிவிட்டு இரவில் பிறர் வீட்டுக்குப் படம் பார்க்கப் போவது மாயாவுக்குப் பிடிக்காது. அதுவும் கொலை, கொள்ளை; வன்முறைகள் நிறைந்த படத் தொடர்களைப் பார்க்க அவள் ரொம்பவும் பயந்தாள்.

''இந்தக் கொலைப்படம் பார்த்துட்டு எனக்குப்பிறகு தனியா வீட்டில் இருக்கப் பயமா இருக்கு. காய்கறிக்காரி கதவைத் தட்டினால் கூடக் கதிகலங்கிப்போய்விடுகிறேன்.

ஏதாவது நகைச்சுவைப் படங்களா இருந்தால் பார்க்கலாம்'' முணுமுணுப்பாள்.

''ஓசியா வீடியோவில் படம் பார்க்கிற வாய்ப்பு கிடைக்கிறது. இது வேண்டும்— அது வேண்டும்னு கேட்க சாத்தியப்படுமா?'' அவன் அவளைப் பரிகசிப்பான்.

''இத்தனை படம் பார்க்கிறீங்க. உங்களுக்கு இதனால் ஏதும் பாதிப்பு ஏற்படலையே! ரொம்ப ஆச்சரியமா இருக்கு!''

''உன்னாட்டமா பாத்ரூமுக்கு எழுந்துபோகத் துணை தேடலைன்னு சொல்றியா?''

''அந்தப் படங்களில் வீட்டிலே ஆண் பிள்ளைகள்கூட சமத்தாப் பெண்டாட்டிக்குச் சமையலில் உதவுறாங்க— சாமான்களைப் அலம்பித் துடைச்சு வைக்கிறாங்களே! அதுபோலச் செய்யணும்னு உங்களுக்குத்தோணலையா?''

'வேலை செய்யும் மனைவியா இருந்தால் ஒரு சமயம் தோணியிருக்கும். நீ வீட்டோட இருக்கே, உழைக்சுட்டுக் களைச்சுப் போய்வர நான் வீட்டில் வந்து வேலை செய்யணும்னா சாத்தியப்படுமா?''

''பெண்கள் வேலைக்குப் போய்விட்டு வீட்டுக்குவந்து சமையல் வேலையைக் கவனித்து கணவன் குழந்தை அனைத்தையும் கட்டி மேய்க்கிறாங்களே! அவர்களால் செய்ய முடிந்ததை ஆண்கள் செய்ய முடியாதா? சொல்லப் போனால் உங்களுக்குத்தான் எங்களைவிட ரொம்பத் தெம்பு.''

''இப்படி மறைமுகமாகச் சொல்லவேண்டாம். நாளைக்கு வேணுமானால் நான் ஆபீசிலிருந்து வந்து கல் உரலில் அடைக்கு அரைச்சுத் தந்துடறேன். சரிதானே?''

''அடடா! இப்படி மூக்கு மேலே ஏன் கோபம் வரணும். சமைச்சுத் தறேன்னு? ஆண், பெண் ரெண்டு

பேருக்குந்தான் சேர்த்துப் பெரியவர்கள் சொல்லியிருக்கா. ஓய்வு நாளிலாவது ஒரு காப்பி போட, குக்கரை ஏத்தி வைக்க, ஒரு ரசம் வச்சு, சாதம் வடிக்க, அப்பளம் காய்ச்சிப் போட்டுக் கொண்டு தானே சாப்பிடத் தெரிஞ்சுக்கணும்.''

''கம்பெனியிலிருந்து வீட்டுக்கு வந்ததும் கரண்டியைப் பிடிக்கச் சொல்றே. ஆகட்டும். உன் கிட்டேயிருந்து சமைக்கக் கத்துக்கறேன்.''

ஒரு ஞாயிற்றுக்கிழமை அவன் அவளைச் சமையலறையில் அனுமதிக்க மறுத்து விட்டான்.

''இன்னைக்கு என்ன மெனு? நானே சமைச்சுடறேன். நேத்து சாயங்காலம் வரவழியிலே புத்தகக் கடையொன்றிலிருந்து 'நீங்களும் சமைக்க முடியும்' என்ற ஒரு புத்தகத்தை வாங்கிண்டு வந்துட்டேன். அதனால் இன்னிக்கு ஐயா தான் காப்பியிலிருந்து எல்லாம் செய்யப்போறார்.''

''செய்யுங்கோ. புஸ்தகத்தைப் படிச்சுட்டா மட்டும் சமையல் கலை வந்துடாது'' சிரித்துக் கொண்டே அவள் குளியலறைக்கு விரைந்தாள்.

''காப்பிப்பொடி எங்கே இருக்கு?சர்க்கரை டப்பாவை எங்கே வச்சிருக்கே? அவரைக் காயை எப்படிப் பொடியா நறுக்கிறது? அட்டா! புளியும் உப்பும் எப்பக் கலப்பீங்கன்னு கேட்க மறந்துட்டேனே!'' அடிக்கொரு தடவை அவன் அடுப்பங்கரையிலிருந்து உரத்துக் குரல் கொடுத்துபடி இருந்தான்.

காப்பியா அது? கழுநீர் போலத்தான் இருந்தது.

தோசைகள் ஏன் அப்படிக் காந்திப் போயின? அவனுக்குத் தெரியவில்லை. அவள் உபயோகித்த அதே மாவு-

மீதமிருந்ததை ஃப்ரிஜ்ஜில் பத்திரமாக வைத்திருந்தாள். அதை எடுத்துத்தானே தோசை வார்த்தான்!

காந்திப்போன தோசைகளையும், கழுநீர்க் காப்பியையும் அவள் மௌனமாகச் சாப்பிட்டாள்.

வெண்டைக்காய் சாம்பார்தான் வாயில் வைக்கமுடியவில்லை. ஒரே கொழ கொழ.

''காயை நறுக்கிய பின் அலம்பக் கூடாதுன்னு அந்தப் புத்தகத்தில் எச்சரிக்கை கொடுக்கலையா?'' சாப்பாட்டின் போது அவள் சிரித்தாள்.

''போறும் எனக்கு சமையல் அனுபவம். நீ இருக்கும் போது நான் எதுக்குத் திண்டாடணும்?'' சாம்பாரை அவனும் ஒதுக்கிவிட்டு மோருடன் சாப்பாட்டை முடித்துக்கொண்டான்.

''பெண்களுக்குப் படிப்பு எதுக்கு அப்படின்னு இந்தக் காலத்தில் யாரும் கேட்கிறதில்லை. ஒரு ஆபத்து சமயத்துக்குப் பெண்களுக்குக் கல்வி கைகொடுத்து உதவும். அதைப்போல ஆண்களும் சமைக்க நன்றாகத் தெரிந்து கொண்டால் வீட்டில் மனைவி இல்லாதபோது—''

''நீ என்னை விட்டுட்டு ஹாய்யா உன் பிறந்தாத்தில் ஹாலிடே கொண்டாடப் போகணும்னு திட்டம் இல்லையா! அதனாலே இப்படிப் பேசறே.''

''உங்களை விட்டுட்டுப் போய் ஒருநாள் கூட என்னால நிம்மதியா எங்கேயும் இருக்க முடியாது. சதா உங்களையே நினைச்சுண்டு இருப்பேன். அதுதான் தெரிஞ்ச கதையாச்சே.''

''சமையல் கத்துக்கச் சொல்லி என்னை ஏன் வற்புறுத்தறே?''

''உங்களை விட்டு நிரந்தரமாப் போய்டுவேன். அப்பா நீங்க சுயம்பாகம்செய்து கொண்டு வாழநேரும்'' என்று எச்சரிக்கை செய்யத்தான் அவள் அன்று அப்படி விளையாட்டாகப் பேசினாளா? அந்த நினைப்பெல்லாம் மனதை முள்ளாக உறுத்த அவன் காப்பியைக் குடித்து விட்டு எழுந்தான்.

இன்று பகல் உணவை அலுவலகக் காண்டீனில் சாப்பிட்டு விடலாம். இரவு எங்கேயாவது ஹோட்டலில் சாப்பாட்டை முடித்துக் கொள்ளலாம். ஆனால் தொடர்ந்து அப்படி வாழ சாத்தியப்படாதே! அவனுக்குக் காண்டீன் சிற்றுண்டிகள் பிடிக்காது. ஹோட்டல் சாப்பாடு வெகு விரைவில் அலுத்துப் போகும். குழந்தை மோகனை வீட்டில் கொண்டு வந்து வைத்துக் கொண்டால்?

அழைப்பு மணி கிணுகிணுத்தது.

எழுந்து கதவைத் திறந்தான். முத்தம்மா முந்தானையை இறுக்கி இடுப்பில் கட்டிக் கொண்டு புன்னகையுடன் உள்ளே வந்தாள்.

''ஐயா, ஒரு சங்கதி உங்க கிட்டப் பேசப் போறேன். பிறகு உங்க இஷ்டம்.''

சம்பளம் கூடுதலாக வேண்டும் என்பதற்கு இந்தப் பீடிகையா?

''பெத்த அம்மா உங்களை இப்படித் திடுதிப்புனு வுட்டுட்டு ஊருக்குப் போயிருக்கக் கூடாது—போயிட்டாங்க. என் மனசிலே ஒரு யோசனை தோணுது. அது உங்களுக்குப் பிடிக்காதோ.''

''சொல்லு கேட்கிறேன்.''

''வீட்டைக் கூட்டிப் பாத்திரங்களைக் கழுவிட்டு இப்படித் தடதடன்னு நாலு வூட்டுக்கு வேலை செய்ய

ஓடறதை வுட்டுட்டு உங்க வீட்டிலேயே நாள் முழுவதும் வேலை செய்ய நான் ஒத்துக்கறேன். மத்த வீட்டுக்காரங்களுக்கு என் சொந்தக்காரப் பெண்களை இட்டாந்து வேலைக்கு வச்சுடறேன். அதனாலே அவங்களெல்லாம் ஏதும் பேச மாட்டாங்க.''

மௌனமாக அவளை வெறித்தான் சிவராமன்.

''உங்களுக்கு மறுப்பு இல்லேன்னா நானே காப்பி பலகாரம் தயார் செய்து கொடுத்துடறேன். உங்க வீட்டுக்கு வேலைக்கு வரத்துக்கு முந்தி நான் ஒரு பங்களாவிலே வேலை பார்த்துக்கிட்டிருந்தேன். அந்த பங்களாவைக் கவனிச்சுக்கிட்டு, அங்கேயே ஒரு பக்கம் தங்கிட்டு, சமையல் வேலை செய்துட்டு எல்லாத்தையும் பொறுப்பாகக் கவனிக்கிற பழக்கம் எனக்கு உண்டு. அந்த வீட்டு அம்மா விதவிதமாக சமைக்கக் கூட எனக்குக் கத்துத் தந்தாங்க. காஸ் அடுப்பை நல்லாவே நான் கவனிச்சுப்பேன். அதை எப்படி ஏத்துறது, அணைக்கிறதுன்னு கத்துத் தந்திருக்காங்க. எங்களைப் போலவா உங்க சமையல்? குக்கரைத் தூக்கி வச்சா பத்து நிமிஷத்திலே சோறும் பருப்பும் தயார். இந்த வெய்யக் காலத்திலே நாலு வீடு ஓட இந்த வயசிலே எனக்கும் தள்ளலை. ஒரே வீடா பார்த்துக்கிட்டுத் தங்கி இருந்து வேலை செய்துட்டு வான்னு என் மகன் சொல்வான். ஒரு சமயம் நாங்க கீழ் ஜாதிக்காரங்கன்னுட்டு நான் சமைச்சதை...''

''சே! சே! ஜாதியாவது, மதமாவது? எனக்கு அதுகளைப் பத்தி அக்கரையில்லை. குழந்தை மோகனைக் கூட்டி வந்து இங்கே வைச்சுக்கப் போறேன்''

''அதாய்யா உங்க கிட்ட சொல்ல ஆசைப்பட்டேன்—உங்க குழந்தை உங்க கையிலே இருக்கிறதுதான் சரி, ஊரார் வீட்டிலே வளர்க்க வுடறது தப்பு. குழந்தையையும் நான் பார்த்துக்கறேன். நாலு வீட்டிலே கொடுக்கிற சம்பளத்தை நீங்க சேர்த்துக் கணிசமாக் கொடுங்க

போதும். நான் பேராசைக்காரியில்லே. சின்னம்மாபோன பிறகு இப்படி நீங்க நாதியற்றுப் போய் நிக்கிறதைப் பார்த்து என் வயிறு எரியுதய்யா. அதனால்தான் கேட்கிறேன்.'' கண்கள் ஈரமாயின.

முத்தம்மாவுக்கு அவனைப் பற்றி இருக்கும் கவலை கூட அவனது பெற்றோர்களுக்கு இல்லையே! மனம் கரைந்து போனான் அவன்.

''ஆகட்டும், அப்படியே செய்வோம். இனி இந்த வீடு உன் பொறுப்பில் இருக்கும். இதை உன்னுதுன்னு நினைச்சுக் கொண்டு ஒரு சோறு பொங்கி வச்சாக்கூடப் போதும். தயிரை ஊத்திக் கொண்டு சாப்பிடுவேன்.''

''ஒரு நாள் என் கை சாப்பாட்டை நீங்க சாப்பிட்டுப் பாருங்க. பிறகு சொல்லீங்க.'' முகம் மலர்ந்து முத்தம்மா பெருமையுடன் வீட்டைச் சுத்தப்படுதத உள்ளே சொன்றாள்,

இன்றோ—நாளையோ, இன்னும் ஒரு வாரமோ சென்றாலும் வீட்டைக் கவனிக்க ஆள் இருக்கிறாள்—குழந்தையையும் பார்த்துக் கொள்வாள். அவன் அவசரப்படாது அலுவலகம் போய்வரலாம். இத்தனை துன்புங்கள் நடுவே இப்படி ஒரு நல்ல வாய்ப்பும் வந்து கிட்டியிருக்கிறதே! அதிசயந்தான்!

''இன்னிக்கு வீட்டைப் பூட்டிக்கிட்டுப் போயிடுங்க. நாளைக்கு நான் எல்லா ஏற்பாடுகளும் செய்துட்டு வந்து வீட்டைக் கவனிச்சுக்கிற பொறுப்பை ஏத்துக்கிறேன். முதல் தேதி பிறக்க இன்னும் இரண்டு நாள் இருக்கே. அதற்குப் பிறகு இந்த வீடு—உங்களுக்கு ஆக்கிப் போடறது, குழந்தையைக் கவனிச்சுக்கிறது எல்லாம் என் பொறுப்பு. கவலைப்படாம கிளம்புங்க ஐயா.'' முத்தம்மா வேகமாக வேலையை முடித்துக் கொண்டு வெளியேறினாள்.

ஜன்னல்களைச் சாத்தி விட்டு இரும்பு அலமாரியை இழுத்துப் பூட்டியிருப்பதைச் சரி பார்த்து விட்டு, காஸ் அடுப்பை மறுபடி தொட்டு அழுத்தமாகத் திருகி மூடி விட்டு அவன் வாயிற் கதவைப் பூட்டிக்கொண்டு வெளிக் கிளம்புவதற்குள் வியர்த்து விறுவிறுத்துப் போனான்.

பொது நடையில் இறங்கி தார் பாதைக்கு அவன் வரும்போது எதிரே இரண்டு இளம்பெண்கள் வந்தனர். அவன் வசிக்கும் ஃபிளாட்டின் பக்கத்துக் கட்டிடத்தின் மேல் பகுதியில் வசிக்கும் பெண் ஒருத்தி—மற்றவள் அவளது சிநேகிதி போலும்

''பார்த்துக்கோ இவனை நன்னா!'' கிசுகிசுத்த போதிலும் துல்லியமாக அவன் காதில் விழுந்தது.

திடுக்கிட்டுக் கழுத்தை நனைத்த வியர்வையைக் கைக் குட்டையால் துடைத்துக் கொண்டான்.

மேல் ஃபிளாட்டுக்காரி தன் சிநேகிதியிடம் பேசியது நன்றாகக் காற்றில் மிதந்து அவன் காதுக்குள் புகுந்தது.

''ஒரு பிரபல நிறுவனத்திலே விற்பனைப் பகுதியிலே பெரிய வேலையில் இருக்கான் இவன். கை நிறையச் சம்பாதிக்கிறான். அப்படியிருந்தும் பண ஆசை. வரதட்சணை கிடைக்கவில்லை. பெண் வீட்டவங்க ஏமாத்திட்டாங்கன்னு ஆத்திரம். பாவி, அந்தப் பெண் மாயாவை மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்திக் கொன்னுட்டான்.''

பட் பட்டென்று இருதயம் கோபத்திலே துடிக்க, கார்ப் பூட்டைத் திறந்தவன் காரை எடுக்க முடியாது துயரத்துடன் ஒருகணம் அயர்ந்து போய் நின்றான்.

இப்படி ஒருகதை அவனைப்பற்றிப் பேசப்படுகிறதா?

மாயாவை அவன் எப்படி நேசித்தான்! அந்த விபத்தினால் ஏற்பட்ட மாபெரும் இழப்பை அவன் தாங்கிக் கொள்ள இயலாது எப்படித் தவிக்கிறான்!

போலீஸ் விசாரிப்பு முடிந்து, விபத்து என்று தீர்மானிக்கப்பட்ட மாயாவின் சாவிற்குப் பொது ஜனங்களிடையே சிலரின் தீர்ப்பு இப்படியாக இருக்கிறதா?

ஆனாலும் உலகம் இத்தனை மோசமானது என்று அவன் கற்பனையில் கூட நினைக்கவில்லை.

இப்பொழுது அவனுக்கு உண்மையில் ஆத்திரத்தில் ஒரு கொலைவெறி பிய்த்துக் கொண்டு வந்தது.

கூசாமல் அவனைக் கொலையாளியாக்கித் தன் சிநேகிதிக்கு ஒரு பயங்கரத்தைச் சொல்ல—அதை அவள் தன் சிநேகிதிக்குச் சொல்ல, அது காது மூக்குடன் வேறு தினுசாக நாலா பக்கமும் பரவி, ஒரு பாவமுமறியாத அவனை ஒரு கொலைகாரனாக்கி, சமுதாயத்தின் விசாரணைக் கூண்டிலே நிறுத்தி வைக்கத் துணிந்த அந்தப் பொய்க்காரியின் மெல்லிய கழுத்தை இரு கரங்களாலும் அழுத்தி இப்பவே கொன்று விட்டால் என்ன?

ஒரு எறும்பைபும் கூடச் சாகடிக்க விரும்பாத அவனை அன்பான 'மனைவியைக் கொன்றவன்' என்று கதை திரிக்கும் அந்தப் பாதகியைக் கொன்று விட்டால் ஒன்றும் குடி மூழ்கிப் போகாது. உண்மையிலேயே ஒரு கொலைகாரன் ஆவான். அவ்வளவுதான்.

காரில் ஏறிக்கொண்டு அவன் எப்படித்தான் அலுவலகத்திற்குள் வந்தானோ, அவனுக்கே தெரியாது.

பழக்க தோஷம் என்பார்கள். அவனையும் மீறி அவன் காலும் கையும் இயங்க, மூளையின் ஒருபகுதி எங்கிருந்தோ எச்சரிக்க, அண்ணா சாலையின் நெருக்கம் நிறைந்த

போக்குவரத்தில் நீந்திக் கொண்டு அவன் அலுவலகம் வந்து சேர்ந்துவிட்டிருந்தது, மிகவும் ஆச்சர்யமே. சுழல் நாற்காலியில் அமர்ந்துகொண்டு முகத்தைக் கைக்குட்டையால் அழுத்தித் துடைத்துக் கொண்டு நிமிர்வதற்குள் பையன் கட்டுக் கடிதஉறைகளை அவன் முன் கொண்டு வைத்தான். அவை எல்லாம் அலுவலகக் கடிதங்கள். அவைகளை வகை பிரித்து அவன் தனியாக அடுக்கி வைப்பதற்குள் கண்ணாடி கூஜாவில் ஐஸ் தண்ணீரும் டம்ளருமாகப் பையன் மீண்டும் உள்ளே நுழைந்தான்.

''இந்தக் கடிதாசி இப்பத்தான் போஸ்ட்டில் வந்தது'' என்று கூறியபடி ஒரு பழுப்புக் கடித உறையை மேஜை மேல் வைத்துவிட்டு அப்பால் போய்விட்டான்.

கடிதம் அவன் பெயருக்கு வந்திருந்தது. 'பர்ஸனல்' என்று சிவப்புப் பேனாவால் தலை ஓரத்தில் எழுதப்பட்டிருந்தது—'அம்மா வந்து சேர்ந்து விட்டாள்' என்று அப்பா அதற்குள் எழுதியிருக்க முடியாது. அவர் எப்பொழுதும் ஒரு கார்டில் நாலு வரி எழுதுவார்—அதுவும் வீட்டு முகவரிக்கு. கையெழுத்தும் அவருடையதல்ல. அப்படியானால் யார் அவனுக்குத் தனிப்பட்ட முறையில் அலுவலகத்திற்கு எழுதியிருக்கிறார்கள்? ஆவலுடன் உறையைப் பிரித்துக் கடிதத்தை உருவினான். கையெழுத்தில்லாத மொட்டைக் கடிதம் அது.

'சிவராமன் என்கிற கொலைகாரனுக்குப் பெண்களின் சார்பில் விடுத்த ஒரு வேண்டுகோள்.

வரதட்சணை போதவில்லை என்ற காரணத்திற்குப் பெண்களை மாடியிலிருந்து தள்ளிக்கொலை செய்வதும்—மண்ணெண்ணெயில் முழுக்காட்டித் தீ வைத்துக் கொல்வதும் நம் தமிழ்நாட்டில் நடப்பதில்லை. நாம் அத்தனைக் கொடுமைக்காரர்கள் அல்ல. பெண்களை வார்த்தையாலும் செயலாலும் சாடி அவமானப் படுத்துவோமே

ஒழிய, அலறித் துடிக்கக் கொல்ல மாட்டோம் என்று நம்பியிருந்ததைப் பொய்ப்பிப்பது போல நீ எத்தனை பெரிய குற்றம் செய்திருக்கிறாய் ! பாவி! வரதட்சணை போதவில்லை என்றால் உன் மனைவி மேல் ஏதாவது காரணம் காட்டி விவாகரத்துச் செய்து தொலைந் திருப்பதுதானே ! பட்டப்பகலில், எரிக்கும் வெய்யில் வேளையில் அவள் அலறித்துடிக்க—மண்ணெண்ணெயை ஊற்றி நெருப்பு வைக்க உனக்கு எப்படியடா மனம் வந்தது ? போலீஸ் விசாரிப்பில் தப்பி விட்டாய். ஆனால் பொது ஜனங்களின் பார்வையில் நீ தப்பவில்லை. அடுத்துத் தேர்ந்தெடுக்கும் மனைவியை எப்படிக் கொல்லப் போகிறாய் ? விஷம் வைத்தா வெடி வைத்தா? ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் சட்டத்தின் பிடியில் நீ சிக்கித் தூக்குக் கயிற்றில் தொங்குவாய். இங்ஙனம் உன்னை வெறுக்கும் பெண் இனத்தின் பிரதிநிதி.''

உதடுகள் காய்ந்து போய், உள்ளம் வேகமாகத் துடிக்கக் கோபத்தில் குமுறிக் கொண்டு மீண்டும் அதைப் படித்தான்.

மனைவியை இழந்துவிட்ட மாபெரும் துயரத்தில் அவன் தன்னைச் சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதையே கண்டு கொள்ளவில்லை.

சில நாட்களாகத்தான் லீவுக்குப் பின் அவன் அலுவலகம் வரத் துவங்கியிருந்தான்.

அவன் குடியிருந்த பகுதியில் விஷயத்தைத் தம் கண்களாலேயே பார்த்தவர்கள் பலர் இருந்தும் அவனைப் பற்றித் தவறாகப் பேசி விட்டாள் அந்த மாடிக்காரி.

விபத்து நடந்த அன்று அவன் அலுவலகத்தில் இருக்கவில்லை. கல்கத்தாவிலிருந்து வந்திருந்த கம்பெனி முதலாளியுடன் அம்பத்தூர் தொழிற்சாலைக்குச் சென்று அதன் பல பகுதிகளையும் பார்வையிட்டபடி அவருடன்

சுற்றிக் களைத்துச் சோர்ந்துபோய், அவரை அவர் தங்கியிருந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலில் விட்டு விட்டு இரண்டு மணியளவில் அலுவலகத்திற்கு வந்து அறைச்குள் நுழைந்து அவசரமாக முகத்தைக் கழுவி முடியைச் சீர் படுத்திக் கொண்டு, மாயா காலையில் அவனுக்கு அன்புடன் கட்டிக் கொடுத்த டிபன் சம்புடத்தைத் திறந்தான். குப்பென்று குர்மாவின் வாசனை முகத்தில் மோதியது-அடிச்சம்புடத்தில் மடித்து வைக்கப்பட்டிருந்த பரோட்டா ஒன்றையெடுத்துப் பிட்டு விஜிடபிள் குர்மாவில் தோய்த்து வாயில் போட்டுச் சுவைத்து விழுங்கிக் கொண்டிருந்த போது தொலைபேசி மணி அடித்தது.

மாயா தான் அவனுக்கு அந்த வேளையில் போன் பண்ணுவாள். அடுத்த ஃபிளாட்டிலிருந்து எப்பொழுதா வது போனில் உணவு வேளையின்போது பேசுவாள்.

கடைத் தெருவிலிருந்து வழக்கமாக மளிகை சாமான் வாங்கும் கடை போனிலிருந்தோ—மருந்துக் கடை போனி லிருந்தோ அவனை அவள் சில சமயம் கூப்பிடுவது வழக்கம்.

''சும்மாத்தான் கூப்பிட்டேன்.''

''என் குரலைக் கேட்கணும்னு ஆசை வந்து விட்டதா...? கல்யாணமாகி நாலு வருஷமாகப் போகிறது. இன்னும் அன்றைக்குப் பார்த்தப்போ என் மேல் ஏற்பட்ட அந்த மோகம், இல்லை, காதல் அப்படியே இருக்குன்னு சொல்லவா?'' அலுவலகத்து ஏ. சி. அறையின் தனிமையில் அவன் உல்லாசமாக, வேடிக்கையாகப் பேசி அவளைப் பரிகசிப்பான்.

''ஆமாம்! சாயங்காலம் வரும்போது மறக்காம குழந்தை மோகனுக்கு அந்தக் கரடி பொம்மை வாங்கிண்டு வந்துடுங்கோ!''

''இதென்ன கரடி விடறே? மருந்துக் கடைக்காரர் காதில் நாம் பேசுவது விழுந்து விடும்னா! பேசாமப் பொறுத்துக்கோ. அடுத்த மாசம் அலுவலகமே எனக்கு வீட்டுக்குப் போன் தரப்போகிறது. பிறகு நீ தினமும் என்னோட பேசலாம். போனை வை. யாரோ என்னைப் பார்க்க வறப் போகிறதாக இண்டர்காமில் அறிவிப்புக் கொடுக்கறா எங்கள் ரிஸப்ஷனிஸ்ட்'' என்று போனை வைத்து விட்டு மகிழ்ச்சியுடன் சிரிப்பான். ஒரு சில வார்த்தை போனில் அவள் பேசினால் கூட எத்தனை உற்சாகம் அவனுக்கு வந்து விடுகிறது! 'மாயாவின் அன்பிலேதான் எத்தனை மோக வசீகரம் இருக்கிறது' என்று எண்ணி வியந்து போவான்.

தனக்குத் தெரிந்த சினிமாப் பாட்டைச் சின்னப் பிள்ளை போல மகிழ்ச்சியில் சீட்டியடிப்பான்.

'மாயா முன்னதாகக் கூப்பிட்டிருப்பாள்—உணவு நேரத்தில் கணவன் அலுவலகத்தில் வழக்கம் போல இல்லையேன்னு கவலைப்பட்டுமறுபடியும கூப்பிடுகிறாள் போலிருக்கு. இந்தப் பொண்ணுக்கு வேறே வேலை கிடையாது போலிருக்கு.' சிரித்துக் கொண்டே போனைக் கையில் எடுத்தான்.

''மிஸ்டர் சிவராமன்?'' மறு பக்கத்தில் ஒரு ஆணின் குரல் கரகரத்தது.

''எஸ். மிஸ்டர் சிவராமன் ஸ்பீக்கிங்.''

''நான் உங்க ஃபிளாட்டுக்கு மூன்றாவதான 'சி' ஃபிளாட்டில் மாடியில்குடியிருக்கிற சதாசிவம். இன்னிக்கு நான் ஆபீசுக்கு லீவுபோட்டுட்டு வீட்டில் இருந்ததாலே—'' மேலே பேசாது மறுமுனையில் இருமல் சத்தம் கேட்டது.

''எஸ். மிஸ்டர் சதாசிவம். என்ன விஷயம்? எதுக்குக் கூப்பிட்டீங்க?''

''மிஸ்டர் சிவராமன், ஐயாம் வெரி ஸாரி. உங்களுக்கு பாட் நியூஸ் சொல்லப் போறேன். உங்க மனைவி கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி மண்ணெண்ணெய் ஸ்டவ்வைப் பற்ற வைக்க முயன்று நைலான் புடவையில் தீப் பிடிக்கப் போக—''

''மிஸ்டர் சதாசிவம். சீக்கிரம் சொல்லுங்கோ. மாயா இப்போ எப்படி இருக்கா? காயம் ரொம்ப பலமோ?''

''ரொம்பக் காயம். உடனடியா தாமதிக்காம நாங்க அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிச்சு விட்டோம். நீங்க புறப்பட்டு வந்தாக்க சௌகர்யமா இருக்கும்.''

கடித்த பரோட்டாவைக் குப்பைக் கூடையில் துப்பி விட்டு அசுர வேகத்தில் காரை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தபோது அவன் ஃபிளாட் எதிரே ஒரு பெரும் கும்பல். தீயணைப்புப் படையினர் கூட இன்னும் நகரவில்லை.

''நாங்க வீட்டைப் பாத்துக்கறோம். நீங்க முதல் வேலையா ஆஸ்பத்திரிக்குப் போங்க.'' சதாசிவத்தின் மனைவி காமாக்ஷி உசுப்பினாள்.

அத்தனை பேர் எதிரில் ஓவென்று கூச்சலிட்டு அழ முடியாது பொங்கி வந்த துக்கத்தை விழுங்கிக் கொண்டு ''சதாசிவம் ஸார். எனக்காக என் காரை ஓட்டிண்டு வருவேளா? எனக்குக் கையும் ஓடலை, காலும் ஓடலை'' தழுதழுத்தான்.

சதாசிவம் உண்மையில் மிகவும் நல்ல மனிதர்.

ஆபத்துக்கு உதவ ஆசை கொண்ட நல்ல உள்ளம் படைத்தவர்.

''காமாக்ஷி! அந்த பிளாஸ்கை எடுத்துக் கொடு'' என்று உத்திரவிட, அவர் மனைவி ஒரு கணத்தில் ஓடிச் சென்று வார் கட்டிய பிளாஸ்க்கை அவரிடம் நீட்டினாள்.

''நீங்க வரத்துக்குள்ளே காப்பியைக் கலந்து சூடா பிளாஸ்க்கில் ரொப்பி வைக்கச் சொன்னேன். ஆஸ்பத்திரிக்குப் போகப் போறோம். அங்கே எத்தனை நாழி காத்துண்டு நிக்கணுமோ! அங்கேயிருந்து வெளியே போக நமக்குப் போது இருக்காது.''

அவருக்கு ரொம்ப முன்யோசனை. பெரியதொரு பிளாஸ்கைத் தூக்கிக் கொண்டு காரோட்டும் ஆசனத்தில் அமர்ந்து கொண்டார் சதாசிவம்.

''காமாக்ஷி! எதுக்கும் நம்ம பாகீரதியை எங்க கூட அனுப்பு. வார்டிலே ஒரு பெண் பிள்ளையை அனுமதிச்சா ஸாரோட பேஷண்டோட கூடத் தங்க மனுஷா வர வரை பாகீரதி கொஞ்சம் உதவட்டும்.'' உத்தரவிட்டார்.

சதாசிவத்தின் விதவை அக்கா பாகீரதி அவருடன் தங்கி வாழ்கிறவள். நொடிப்பொழுதில் கொடியிலிருந்த துவைத்த சுத்தமான புடவையொன்றைக் கட்டிக் கொண்டு தலையை வாரிக் கோடாலி முடிச்சிட்டுக் கொண்டு நெற்றியில் விபூதிக் கீற்றுடன் வேகமாக வெளியே வந்து காரின் பின் ஆசனத்தில் ஏறிக் கொண்டாள்.

சிவராமனுக்கு யோசிக்கும் அறிவே மரத்துப்போனது. பிரமை பிடித்தவன் போலத் துயரத்திலே கல்லாக இறுகிப் போய் எல்லாப் பொறுப்பையும் சதாசிவத்திடம் கொடுத்து விட்டு அவர் பின்னால் நடந்தான். சொன்னதற்கெல்லாம் தலையை ஆட்டினான்.

சதாசிவத்திற்கு ஆஸ்பத்திரி அனுபவங்கள் அதிகமாகவே இருந்தன. காரை உரிய இடத்தில் நிறுத்தி விட்டு, கைத் தாங்கலாக சிவராமனை இழுத்துக் கொண்டு பாகீரதி பின்தொடர காஷுவால்டிக்குள் நுழைந்தார். அங்கே ஒரே கூட்டம். விபத்துக் கேஸ்கள், அவர்களது

உறவினர்கள், டாக்டர்கள், நர்ஸ்கள், ஆஸ்பத்திரிப் பையன்கள் என்று எங்கு திரும்பினாலும் கூட்டம். அதற்குள் புகுந்து தமக்குத் தெரிந்த ஒரு டாக்டரை வசமாகப் பிடித்துக் கொண்டு விட்டார்.

பெயரைச் சொல்லி, சற்று முன் டாக்ஸியில் அனுப்பி வைத்த கேசின் விவரத்தைச் சொல்லிக் கேட்டபோது டாக்டர் உடனடியாகத் தகவல் கொடுத்து விட்டார்.

''யெஸ். வார்டுக்கு அனுப்பி விட்டோம். சர்ஜிகல் ஃபோர்த் யூனிட் பி வார்டில் போய் விசாரியுங்கள்'' என்று பதிலளித்தார்.

நேரம் யுகமாக நகர்வது போலவும் வார்டுகள் நெடுந் தூரத்திலிருப்பது போலவும் பிரமையில் திளைத்துப்போய் விட்டிருந்த அவனை சதாசிவம், பெற்ற தந்தை போல அன்புடன் அழைத்துக் கொண்டு சென்றார். ''கவலைப் படாதீங்க ஸார். நன்மையையே நினைச்சிண்டு போவோம்.'' உற்சாகப்படுத்தினார்.

ஸர்ஜிகல் ஃபோர்த் யூனிட் பி வார்டின் வாசலில் வந்ததும் சதாசிவம் அங்கே தொங்கிய போர்டை உன்னிப் பாகப் பார்த்தார். ''டி. எல். லிஸ்டிலே எத்தனை பேர் போட்டிருக்கு என்று பார்க்கிறேன்'' என்றபோது சிவராமன் குழப்பத்துடன் விழித்தான்.

''தீவிர நோயாளிகளின் எண்ணிக்கையை 'டேன்ஜர் லிஸ்ட்' என்பதில் போடுவாங்க. இன்னிக்கு இந்த வார்டில் மூணு பேர் 'டேன்ஜர் லிஸ்ட்'டில் இருக்காங்க. நம்ப பேஷண்ட்டும் இதில் ஒருத்தியான்னு முதல்ல தெரிஞ்சுக்கணும். கவலைப்படாதீங்க ஸார். நான் கவனிச்சுண்டு வரேன்.'' சதாசிவம் வேகமாக வெளியே வந்த ஒரு குட்டி டாக்டரை அணுகினார்.

''ஸார், மாயான்னு ஒரு பெண், கொஞ்ச நாழிக்கு முன்னால் இங்கே அனுமதிக்கப் பட்டிருக்காங்க. அவங்க

இந்த டேஞ்ஜர் லிஸ்ட்டில் ஒருவரான்னு கொஞ்சம் பார்த்துச் சொன்னா ரொம்ப உபகாரமா இருக்கும்.'' அந்தச் சின்ன டாக்டருக்கு வயதில் பெரிய சதாசிவம் கை கூப்பித் தழதழத்த குரலில் கேட்டார். டாக்டர் உள்ளே சென்று சிறிது பொழுதில் திரும்பினார். கவலை படர்ந்த அவரது முகம் சொல்லி விட்டது உண்மையை.

''ஆமாம்! பி வார்டில் ஏழாம் நம்பர் கட்டிலில் இருக்கும் பேஷண்ட் மிஸஸ் மாயா சிவராமன். நாற்பத் தைந்து சதவிகிதம் நெருப்புக் காயம். அதனால் டேஞ்ஜர் லிஸ்ட்டில் போட்டிருக்காங்க.''

''ஸார். என் மனைவி பிழைக்க மாட்டாள்னு சொல் றீங்களா?''

தாங்க முடியாது வெட்கத்தை உதறி விட்டு விசும் பினான் சிவராமன்.

''தீவிரக் கவனிப்பில் இருக்காங்க. பிரகல்ஸ் கான் ஹாப்பன்.''

அந்த இளம் வைத்தியர் தோள்களைக் குலுக்கிவிட்டு நகர்ந்தார்.

சிறிது நேரத்திற்குப் பின்னர் நர்ஸ், டாக்டர் முதலி யோரின் அனுமதியின் பேரில் அவர்கள் மூவரும் வார்டுக் குள் நுழைந்து கட்டிலைச் சுற்றிப் போட்டிருந்த ஸ்கிரீனுக்குள் மெல்ல எட்டிப் பார்த்தபோது சிவராம னுக்கு மயக்கமே வந்து விடும் போல இருந்தது.

''நாங்கள்ளாம் கூட இருக்கோம். அதைர்யப் படக் கூடாது.''

மெல்ல அடிக் குரலில் ஆதரவாகப் பேசினார் சதாசிவம்.

கட்டிலின் மேல் ரப்பர் விரிப்பில், மேலெல்லாம் மஞ்சள் திரவத்தில் நனைந்த காஸ் துணியுடன், குழாய்

வழியாகத் திரவம் செலுத்தப்பட்ட நிலையில் பாதி நினைவில் வேதனையில் மெல்ல முனகியபடிக் கிடந்த மாயாவைக் கண்ட சிவராமன் அடக்க முடியாது விம்மி அழுதுவிட்டான்.

''உஸ் உஸ்'' என்று நர்ஸின் அதட்டலைக் கேட்டு வாயிற்குள் கைக்குட்டையைத் திணித்துக் கொண்டு நெஞ்சு வெடித்து விடும் போலத் துயரத்தில் உடைந்து போனான்.

''மாயா! என்னம்மா ஆச்சு? மாயா!'' என்று திக்கலும் திணறலுமாக அவன் கேட்டபோது கண்களை விழித்து அவனைப் பார்த்தாளே, அந்தப் பார்வையில்தான் எத்தனை மென்மை! ''கவலைப்படாதீங்க. நான் பிழைச்சுக் கொண்டு வந்து உங்களோடு மீண்டும் வாழ்வேன்''—சொல்லாமல் சொல்லியதே அந்தக் கண்கள்!

''சிவராமன் ஸார். பி பிரேவ், எல்லாம் சரியாகிவிடும். நான் பிரார்த்தனை செய்துகொண்டுதான் கிளம்பினேன்'' சதாசிவம் அனுசரணையுடன் அணைத்துக் கொண்டார்.

சிறிது நேரம் சென்றதும் நர்ஸ் அருகில் வந்தாள். ''ஒரே ஒரு விசிட்டர் மட்டும் உதவிக்குக் கூட இருக்கலாம். மத்தவங்கள்ளாம் போயிடணும். டாக்டர் உத்திரவு'' என்றாள் அதிகாரக் குரலில்.

''பாகீரதி நன்னாக் கவனிச்சுப்பா. பெண்கள் வார்டு. பெண்தான் கூட இருக்க அனுமதிப்பாங்க. நாம்ப வெளியில் போய் மத்த காரியங்களைக் கவனிப்போம். உங்க பெற்றோர்களுக்கு, அவள் உறவினர்களுக்கெல்லாம் டிரங்க்கால் பண்ணி வரச் சொல்ல வேண்டாமா?''

அடுத்த நாளே கிடைத்த பஸ்ஸிலும் ரயிலிலும் அம்மாவும் அப்பாவும், மாயாவின் அண்ணா, மன்னி, அவள் அப்பா அம்மா எல்லோரும் வந்து சேர்ந்து விட்டனர்.

அம்மாவைக் கண்டதும் பச்சைக் குழந்தை போலத் தோளில் முகத்தைப் பதித்துக் கொண்டு விம்மி அழுதான் அவன்.

''புருஷப் பிள்ளையா லக்ஷணமா தைர்யமா இருக்கணும். இப்படியா இடிஞ்சி போவா?'' அம்மா தெம்பு சொன்னாள்.

அடுத்தநாள் மாலை வார்டிலேவந்து அம்மா பார்த்த போது ஆடிப் போனாள்.

வார்டு டாக்டரிடம் கெஞ்சிக் கேட்டபோது அவர் உண்மையைச் சொல்லி விட்டார்.

''தீக் காயங்களுக்கு முதல் இருபத்து நான்கு மணி நேரம் மிகவும் கடுமையான காலம். ஷாக் எனும் அதிர்ச்சி அடங்கியதும் பின்னர் காயத்தில் சீழ் கட்டிக்கொள்ளலாம். இந்தக் கேசைப் பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை. நிலைமை கொஞ்சம் மோசமாகத்தான் இருக்கு.''

''ஸார், அப்படின்னா என் மனைவியை நாங்கள் வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போக அனுமதியுங்கள். உறவினர் மத்தியில் வீட்டில் அவள் உயிரை விடட்டும்.'' கண்களில் நீர் புரளக் கெஞ்சினான் சிவராமன்.

''எப்படி சார் நீங்க பெரிய உத்தியோகத்தில் இருக்கிறீங்க? இந்த சின்ன விஷயம் தெரியலைன்னா சொல்றீங்க? உங்க மனைவி இப்போ ஒரு போலீஸ் கேஸாகி விட்டிருக்கிறார். வீட்டுக்கு அனுப்ப முடியாது. இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் இறக்கும் எந்த தீ விபத்துக் கேசையும் நாங்கள் பிரேதப் பரிசோதனை இன்றிக் கொடுக்க முடியாது.''

''பிரேதப் பரிசோதனையா?'' அவன் குரல் நடுங்கியது.

"இந்த விஷயத்தில் சட்டம்இப்போது மிகவும் கடுமை யாகி விட்டிருக்கிறது. திருமணமான பெண் ஒருத்தி, திருமணம் நடந்து ஐந்து வருஷம் முடிவதற்குள் தீ விபத் திலோ, வேறு ஏதாவது வகையிலோ இறந்து விட்டால், 'அவளது உடலைப் பிரேதப் பரிசோதனை செய்தபின்னர் தான் உறவினர்களுக்குக் கொடுக்க வேண்டும். அவளது மரணத்தில் எந்த விதமான சந்தேகத்துக்கும் இடமில்லை. விபத்தில் ஏற்பட்டது' என்று போலீஸ் விசாரித்துத் தெரிந்த பின்னர்தான் சடலம் உறவினர்களுக்குக் கிட்டும்."

"மாயா! பிழைச்சுக்கோம்மா. உன் அழகை அக்னி பகவான்சாப்பிட்டிருந்தாலும் பரவாயில்லை. பிளாஸ்டிக் ஸர்ஜரிக்கு என் சொத்து பூராவையும் அடகு வச்சு உன் ஊனத்தைச் சரிப்படுத்தச் செய்வேன். உன்னை அமெரிக் காவுக்கே எடுத்துப் போய் ஏதாவது புது சிகிச்சை இருந் தால் செய்ய ஏற்பாடு பண்ணுவேன். சத்தியம், பிழைச் சுக்கோம்மா, மாயா!" தனக்குள்ளே கூறியபடி ரகசியமாக அழுதான் சிவராமன் அன்று பலமுறை.

சதாசிவம் காஷுவால்டி டாக்டர் ஒருவரைப் பார்த்து, பேஷண்ட் கொடுத்த விபத்துவிவரத்தை மெல்ல விசாரித்து வந்திருந்தார்.

"பகல் இரண்டு மணிக்கு முன்னால் உங்களுக்கு ஆபீ சுக்கு போன் பண்ணினாளாம். பதில் இல்லையாம். 'போகட்டும், மாலை வீடு திரும்பும்போது அவர் கேட்ட காசி அல்வாவைக் கொஞ்சம் செய்து வச்சுடலாம்'னு அடுப்பை மூட்டினாளாம். காஸ் தீர்ந்து விட்டதாம். 'பர வாயில்லை. மண்ணெண்ணெய் ஸ்டவ்வில் செய்து விடலாம்' என்று அதைப் பற்ற வைத்துவிட்டு ஒரு முக் காலி மேல் ஏறி அலுமினிய அடுக்கை மேல் பலகையி லிருந்து எடுக்க முயன்றபோது முக்காலி நொடிச்சுக் கொள்ள தொப்பென்று கீழே தரையில் வைத்திருந்த

எரிகிற ஸ்டவ் மேல் விழ, நைலான் புடவை தீப்பற்றிக் கொள்ளவே தாங்க முடியாது அலறினாளாம்.''

காதுகளைப் பொத்திக் கொள்ள வேண்டும் போலக் கேட்கப் பிடிக்காது வேதனையில் புழுங்கினான் சிவராமன்.

ஒருமுறை சூடான தோசைக் கல்லின் ஓரத்தைத் தொட்டுவிட்டு, ஆள்காட்டி விரலின் நுனியில் காய்ந்த கல் நன்றாகச் சுட்டுவிட, அப்பப்பா, அவன் வலியில் எப்படித் துடிதுடித்துப் போனான்! மாயா, பட்டுப் போன்ற அந்த உடம்பு முழுவதிலும் இங்குமங்கும் காயம் பட்டு அந்த வேதனையில் எப்படித் துடித்திருப்பாள்! அலறி அழுதிருப்பாள்! 'நான் உன் கிட்ட இருந்து அது சமயம் உதவலையே பாவி! மாயா, உனக்கு ரொம்ப வலிச்சிருக்குமே! கர்ப்பிணியான உனக்கு இந்த விதமான விபத்தா வரணும்? கடவுளே!'

''ஸார்! இன்னிக்குக் காலை, முதலாகக் கவனிக்க வேண்டியது டைப்பிஸ்ட்டுகளுடைய இண்டர்வியூ. மூணு பேரை மானேஜர் தேர்ந்தெடுத்திருக்கிறார். பைனல் இண்டர்வியூவை நீங்கதான் முடிக்கணும்னு சொன்னார்னு நேத்திக்கே ஞாபகப்படுத்தினேனே!'' இண்டர்காமில் ரிஸப்ஷனிஸ்ட் தேன் குரலில் குழைந்தாள்.

கடந்துபோன சோக நினைவினின்று திடுக்கிட்டு விழித்துக் கொண்டான் சிவராமன். அவனையும் மீறிக் கன்னத்திலே ஓடிய கண்ணீரைச் சட்டென்று துடைத்துக் கொண்டு கைக்குட்டையால் மூக்கை உறிஞ்சினான். எதிரே தெரிந்த கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக் கொண்டான். டையைச் சரிப்படுத்திக் கொண்டு, ''எஸ், ஞாபகம் இருக்கு. ஹெட்கிளார்க்கை அனுப்பு'' என்றான்.

மூன்று பெண்கள் [illegible]ரு வேலைக்கு நேர்முகத் தேர்வுக்கு வந்திருந்தனர்.

அவனுக்கு இப்பொழுது இளம் பெண்கள் யாரிடமும் பேசவோ, கேள்வி கேடகவோ பொறுமை இல்லை. மனமும் இல்லை.

''சாப்பிட்டீங்களா ஸார்?'' வேணுகோபால் உள்ளே வந்தார்.

இன்னும் ஓராண்டில் ஓய்வடையப் போகிறவர். பழுத்த அனுபவஸ்தர்.

''எனக்காக, வந்திருக்கும் மூன்று பெண்களையும் கேள்வி கேட்டுத் திறமையைப் பரிசோதித்துத் தேர்வு செய்யுங்கோ ஸார். எனக்கு—'' என்று பேச முடியாது அவரைப் பரிதாபமாகப் பார்த்தான்.

''மிஸ்டர் சிவராமன், எனக்கு, உங்கள் மனநிலை நன்றாகவே புரிகிறது. நான் கூட மனைவியை இழந்தவன் தான். இரண்டு வருஷத்துக்கு முன் மாரடைப்பில் மஞ்சளும் குங்குமமுமாக அவள் போயிட்டா. இன்னமும் அந்த இழப்பின் கொடுமையிலிருந்து நான் நிமிரலை. பசங்க இருக்காங்க. மருமகள் இரண்டு பேர் இருக்கா. மகள் ஒருத்தி இருக்கா. யார் இருந்தா என்ன ஸார்? ஒரு மனிதனுக்கு அவன் மனைவியைப் போல உற்ற துணை வேறு யாரும் இருக்க முடியாது. நான் என்னவோ பேசிட்டுப் போறேன். மன்னிக்கவும். காலம் எல்லாரணத்தையும் ஆத்திடும். வருத்தப்படாதீங்க.'' பரிவாகப் பேசினார்.

திடீரென்று அந்தக் கேள்வி மனதில் தோன்ற அடக்க முடியாது கேட்டு விட்டான்.

''ஸார் உண்மையைச் சொல்லுங்கோ. விபத்து நடந்த அன்னிக்கு நான் முதலாளியோட அம்பத்தூர் தொழிற்சாலைக்குப் போயிருந்தேன். நான் திரும்பி வரதுக்குள்ளே

அவள் ஆஸ்பத்திரியில் கிடந்தாள். இங்கே அதைப்பத்தி நம்ப ஊழியர்கள் என்ன பேசிக்கிறாங்க ஸார்?''

வேணுகோபால் சிறிது நேரம் மௌனமாக அவனை ஊன்றிப் பார்த்தார்.

''அவசியம் தெரியணுமா ஸார்?'' மெல்லிய குரலில் கேட்டார்.

''மனிதனுக்கு உண்மை தெரிஞ்சிருப்பது எப்பவும் நல்லதாச்சே!''

''உண்மை உங்களுக்குத் தெரியும். என்னைப் போன்ற பலருக்குத் தெரியும். எல்லாம் வல்ல இறைவனுக்குத் தெரியும். அந்த விபத்து நேர்ந்தப்போ எதிர் பக்கத்துக் கட்டடத்திலே வெள்ளை அடிச்சுக் கொண்டிருந்த ஆள்படைகள் அலறலைக் கேட்டுட்டு சாயப் பிரஷ்ஷைக்கீழே போட்டுட்டு ஓடிக் கதவை உடைச்சுத் திறந்து சுருண்டு கிடந்தவ மேலே தண்ணியை விட்டு நெருப்பை அணைச்சு உதவினாங்க. ஒருத்தன் நெருப்பணைக்கும் படையினரைக் கூடக் கூப்பிட்டு விட்டான். பயத்தில். நிலைமை அப்படியிருந்தபோது, வாய் புளிச்சதோ மாங்காய் புளிச்சதோன்னு சில காலிப் பசங்க பேசறதை நீங்க காதில் போட்டுக்கக் கூடாது ஸார்.''

''அப்படி என்ன பேசறாங்க?''

''அதை என் வாயால் சொல்லணுமா?''

''சொல்லுங்க ஸார். நான் இனி எதுக்கும் அஞ்சப் போவதில்லை என் மனைவியை இழந்த துக்கத்தை விட இனி எந்த அதிர்ச்சியும் என்னை ஒண்ணும் பண்ண முடியாது.''

''ஒருசில மடையன்கள் தற்கொலை செஞ்சுக்கிட்டாங்க மாயா அம்மான்னு கதைபேசுகிறார்கள். இன்னும்

சில அயோக்கியன்கள் விபத்து நடந்த சமயம் இவர் ஆபீஸில் இல்லை. இது கொலையாகத்தானிருக்கும் என்கிறாங்க. நிறைய கண்ட பத்திரிகைகளைப் படிக்கிறாங்க. சினிமாக்கள் பார்க்கிறாங்க. அதன் பாதிப்பு இந்த மாதிரியான கோணலான சிந்தனைகள். விட்டுத் தள்ளுங்க. பிறத்தியார் அபிப்ராயத்துக்கு நாம் வாழமுடியாது. நம்ம மனசாட்சிக்குப் பயந்து நாம் வாழணும். மன்னிச்சுக்கோங்க. உங்களுக்குப் புத்தி சொல்லற அளவுக்கு நான் ரொம்ப மேதையில்லை. மூணு பேரையும் நானே கேள்வி கேட்டுக் கடைசியா ஏன் தேர்வு செய்தேன்னு விவரத்தையும் எழுதி, தேர்ந்தெடுத்த காண்டிடேட்டை மட்டும் உள்ளே அனுப்பறேன். ஓ. கே. செய்திருங்கோ'' என்று சொல்லிவிட்டு வேணுகோபால் வெளியே சென்றார்

கொஞ்ச நேரத்தில் கையில் ஒரு ஃபைலுடன் உள்ளே வந்து நின்றாள் ஒரு இளம்பெண்.

தலையை நிமிராது அவளை உட்காரச் சொல்லி உபசரித்தான் சிவராமன்.

ஃபைலைத் திறந்து பார்த்தான். வேணுகோபால் குறிப்புகளை வரிசைப்படுத்தி எழுதியிருந்தார்.

நிமிஷத்திற்கு நாற்பது வார்த்தைக்கு மேல் டைப் அடிக்கும்திறமை இருக்கிறது. அறுநூறு வார்த்தைகளைப் பதின்மூன்று நிமிஷத்திலே முடித்து விட்டாள். ஆகவே, வேகம் என்பதில் திறமைசாலியாக, வந்திருக்கும் மூன்று பேரில் முதலாவதாக இருக்கிறாள் இவள்.

கையெழுத்துப் பிரதி ஒன்றைக் கொடுத்து டைப் அடிக்கச் சொன்னேன்.

கண்களில் ஒத்திக்கலாம் போலச் சுத்தமாகப் பிழையில்லாமல் கமா, முற்றுப்புள்ளி வைத்து அழகாக டைப் செய்திருக்கிறாள்.

அதிலும் மூவரில் இவள்தான் திறமைசாலியாக இருக்கிறாள்.

நேரிடையாகக் கேட்டேன். டைப் யந்திரங்களில் அவ்வப்போது ஏற்படும் சில்லறைச் சிக்கலைத் தானே சரி செய்து கொள்ளும் திறமையையும் வெளிப்படுத்தினாள்.

இந்த மூவரில் இப்போது நான் அனுப்பியிருக்கும் மிஸ் சரளாதான் இந்த வேலைக்குத் தகுதியானவள்— இவள் ஒரு பட்டதாரி கூட.''

ஃபைலுக்குள் வேணுகோபால் வைத்திருந்த கடிதத்தைப் படித்ததும் திருப்தியடைந்தவனாக, டைப் செய்திருந்த காகிதத்தைப் பார்த்தான். வேலை வெகு நேர்த்தியாகத்தான் இருந்தது.

''மிஸ் சரளா, உங்களுக்கு எந்தவிதமான டைப் யந்திரங்களைக் கையாளத் தெரியும்?'' கேட்டபடி ஃபைலை மூடி வைத்தான்.

''காத்ரஜ்—ரெமிங்டன், எலக்ட்ரிக் டைப்ரைட்டர் இருந்தால் கூட என்னால் இயக்க முடியும்.''

''அப்படியா! வெரிகுட்''என்றபடி தலையை நிமிர்த்தி அவளைப் பார்த்தான். திடுக்கிட்டுப் போனான்.

மாயாவை உயிருடன் பார்த்து விட்டது போல அப்படி ஒரு சாயல்.

''உங்களுக்கு என் பதில்கள் திருப்தியைக் கொடுத்திருக்கும்னு நம்புகிறேன் ஸார்.'' ஆங்கிலத்தில் பேசியபடி மெலிதாக அவள் சிரித்தபோது நெஞ்சை ஈட்டியால் குத்துவதுபோன்றதொரு வேதனையில் துடித்துப் போனான்.

கன்னம் குழிய மாயாவைப் போலவே சிரிக்கிறாளே! ஊகூம், சாயலில் எத்தனையோ பேர் மாயாவைப் போ

இருக்கலாம்; குணத்தில் அவளுக்கு யாரும் இணையாக முடியாது.

"மிஸ் சரளா, நீங்கள் போய் வரவேற்பறையில் உட்காருங்கள். தலைமைக் கணக்கர் மற்ற விவரங்களைச் சொல்லுவார்." சட்டென்று தலையை கவிழ்த்துக் கொண்டான்.

"கூப்பிட்டீங்களா சார்..." கேட்டபடி உள்ளே வந்தார் வேணுகோபால்.

'சரியான, திறமை மிக்க டைப்பிஸ்ட்டைத்தான் தேர்வுசெய்து அனுப்பியிருக்கீங்க. வேலையை மிஸ் சரளாவுக்குக் கொடுத்துவிட ஏற்பாடு செய்து விடுங்க. அப்பாயின்ட்மென்ட் கடிதத்தில் கையெழுத்துப் போட்டுடறேன்—ஆனால் ஒரு நிபந்தனை."

"சொல்லுங்க சார்."

"நம்ப அண்ணாசாலை அலுவலகத்திற்கு இவளை அனுப்பி விட்டு அங்கிருக்கும் குணசீலனை இங்கே மாற்றி விடுங்கோ."

"நம்ம ஆபீஸ்தான் ஒரு நல்ல டைப்பிஸ்ட் இல்லாமக் கஷ்டப்படுகிறது."

"பரவாயில்லை. கொஞ்ச காலம் எனக்கு லேடி டைப்பிஸ்ட்டுகள் இங்கேதேவையில்லை. ஃபைல்களைத் தூக்கிக் கொண்டு இளம் பெண்கள் என் அறைக்கு வரதை நான் விரும்பலை."

தலையை அசைத்தார் வேணுகோபால். அவருக்கு நன்றாகவே புரிந்தது. மனைவியை இழந்த புதிதில் அவருக்குக் கூடத் தெருவில் எதிர்ப்பட்ட பெண்கள் மீது ஒரு எரிச்சல் ஏற்படும். இனம் விளங்காத ஒரு கோபம்.

''இவர்கள்எல்லாம் உயிரோடு வாழ்கிறார்களே! என் மனைவி மட்டும் ஏன் இறந்து போகணும்?'' என்று பொருமுகிற மனதிற்குப் பதில் சொல்ல முடியாத ஒரு இயலாமையில் ஏற்படும் ஆத்திரம்.

''அப்படியே செய்துடறேன் ஸார்.'' முறுவலித்து விட்டு அவர் வெளியே சென்றார். மேஜையில் புத்தகம் ஒன்றின் அடியில் அவன் வைத்திருந்த அந்த மொட்டைக் கடிதத்தைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்துப் போட்டு விட்டு அவன் தன் வேலையில் மூழ்கிப் போனான்.

வீட்டுக்குப் போவதற்கு முன்னர் மாலை, அவன் ஒரு கடிதத்தை அவசரமாக எழுதித் தபாலில் சேர்த்து விட்டான்.

மாயாவின் அண்ணனுக்குத்தான் கடிதம் எழுதி யிருந்தான்.

குழந்தையை எடுத்துப்போக அவன் வர வேண்டும் என்று அவர்கள் எழுதுமுன் அவனே முந்திக் கொண்டான்.

''மோகனை உங்கள் பாதுகாப்பில் வைத்துக் கொண் டிருந்ததற்கு மிக்க நன்றி. தாயுமில்லாது தந்தையின் அருகாமையுமின்றிவளர்வது ஆரோக்யமானதல்ல என்பது என் அபிப்ராயம். இந்த வார இறுதியில் லீவு எடுத்துக் கொண்டு ஊருக்கு வருகிறேன். அன்புள்ள சிவராமன்.''

வீட்டிற்கு வந்ததும், அன்று இரவும் அவனுக்கு வெகு நேரம் உறக்கம் வரவில்லை.

சரளா சிரித்தபோது ஏற்பட்ட மாயாவின் நினைவு நெஞ்சோடு ஒட்டிக்கொண்டு விட்டது போல, உறக்க மின்றிக் கடந்துபோன பல சங்கதிகளையும், கோவையாக

எண்ணிப் பார்த்தபடிப் படுக்கையில் புரண்டு கொண் டிருந்தான்.

முதன் முதலாக அவன் மாயாவைச் சந்தித்த அந்த நிகழ்ச்சி கண்முன் வந்ததும் உடம்பெல்லாம் புல்லரித்துப் போய், அப்பொழுதுதான் அவளை நேரில் சந்திப்பது போன்ற ஒரு இனிய உணர்வில் கலந்து போனான்.

வேலைக்கமர்ந்து சில ஆண்டுகளாகி விட்டிருந்தன. சென்னையில் அவனுக்காகக் குடித்தனம் வைக்க அப்பா ஒப்புக் கொள்ளவில்லை.

ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டு நண்பன் ஒருவனுடன் ஒரு வீட்டின் மாடி அறையைப் பகிர்ந்துகொண்டு வசித்த காலம்.

பத்து நாள் லீவில் ஒரு தடவை கும்பகோணத்திலிருந்த தன்பெற்றோரைப் பார்த்துவரப் போயிருந்தான்.

வழக்கம்போல அப்பா அவனைக் கண்டதும் கல்யாணப் பேச்சைத் துவங்கினார்.

தாம் பார்த்திருக்கும் இடங்கள், கிடைக்கக் கூடிய வரதட்சிணை வசதிகள் என்பதைப் பற்றி அவர் பேசியதைக் கேட்டுச் சலித்துப் போனான்.

ஒரு பெண்ணைப் பார்த்து, மனதுக்குப் பிடித்து, காதலித்துப் பின்னர் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்பது அவனது உள்ளத்து அவா.

காதலாவது கத்திரிக்காயாவது என்று, தெரிந்தால் கூடக் கத்தி ரகளை செய்வார் அப்பா. ஒவ்வொரு முறையும் அவன் கல்யாணப் பேச்சைத் தட்டிப் போட்டுக் கொண்டே வந்தான்.

அன்று பகல் சாப்பாட்டிற்குப் பிறகு அப்பா வலங்கைமானிலிருந்த தமது ஷட்டகரைப் பார்க்கப் போய்விட்டிருந்தார்.

தனியே ஒரு கதைப் புத்தகத்துடன் வாயில் வராந்தாவில் உட்கார்ந்திருந்தவன் மல்லிகைப் பூவின் வாசம் முகத்தில் மோதுவதை உணர்ந்து நிமிர்ந்து பார்த்தான்.

நீல வாயில் சேலையில் நீல மலர்போலக் கண்களை அப்படியே ஈர்த்துக்கொண்ட அழகில் யார் அந்தப் பெண்? தலையில் ஒரு சுமை மல்லிகைப் பூவுடன், கன்னம் குழியலேசாகச் சிரித்தபடி !

''மிஸஸ் பார்வதி நீலகண்டன் வீட்டில்தானே இருக்காங்க?''

சிறிதளவே தெரிந்த பற்களின் வரிசையைப் பார்த்து வியந்தவனாக, ''ஆமாம் இருக்காங்க. நீங்க யார்னு சொன்னால்...'' என்றான்.

''என் மன்னி இதைப் பார்வதி அம்மாளிடம் கொடுத்துட்டு வரச்சொன்னா. நாங்க அடுத்த தெருவில் இருக்கிறோம். மன்னிக்குப் பார்வதி மாமி ரொம்ப சிநேகிதி. புதிதாப் போட்ட ஊறுகாய் எப்படியிருக்குன்னு ருசிபார்த்துட்டுச் சொல்லக் கொடுத்தனுப்பியிருக்கா.'' தோள்களை லேசாகக் குலுக்கி விட்டு, சந்தோஷத்துடன் அவனைத் திருப்பிப் பார்த்தபடி உள்ளே சென்றாள்.

ஒரே ஒரு கணம்தான் நிகழ்ந்த சந்திப்பு. எதேச்சையாக ஏற்பட்டது. பார்த்த அளவிலே மனதிற்குள் பசையாக ஒட்டிக்கொண்ட ஒரு உறவு அது. எத்தனை ஜன்மம் எடுத்தாலும் மாயாவை அவன் மறக்கத்தான் முடியுமா? மாயாவைப் போல வேறு ஒருத்தியை அவன் காதலிக்கத்தான் இடலுமா?

தலையணை மீது உதிர்ந்த கண்ணீரை விரலால் சுண்டி விட்டு அவன் தூங்க முயன்றான்.

# 4

இறந்தவர்களுக்குக் காலம் இறக்கை கட்டிக்கொண்டு பறக்கும் என்று அம்மா அடிக்கடி சொல்வதுண்டு.

அது முற்றிலும் உண்மை என்பதை சிவராமன் உணர்ந்தான். மாயா அவனை விட்டு மாயமாகி ஒரு வருஷ காலம் ஒரு நொடி போல் வேகமாக மறைந்தோடிப் போயிற்று.

முன்கூட்டி அவன் போட்ட திட்டப்படி குழந்தை மோகனைத் தன்னுடன் வீட்டில் வைத்துக் கொண்டு முத்தம்மாவிடம் குழந்தையையும் ஒப்படைத்து விட்டு வேலைக்குப் போய் வந்தான்.

முன் போல மாயாவின் மறைவு மனதில் ஒரு பயங்கரத் துயரமாக அவனை வருத்தவில்லை.

மோகனது மழலையில் ஓரளவு ஆறுதல் பெற முடிந்ததால் அந்தப்பேரிழப்பின் துக்கத்தை அவனால் இப்போது தாங்கிக்கொள்ள முடிந்தது.

எங்கு திரும்பினாலும் அவளது நினைவு பரவிக் கொண்டு நின்று நெஞ்சை வருடுவது மட்டும் நிற்க வில்லை.

குழந்தை மோகனது சிரிப்பில், அவன் கண்களில் தெரிந்தஒளியில், தூரத்தே பார்க்கும்போது குழந்தையிடம் காணப்பட்ட அந்தச் சாயலில் அவன் மாயாவைப் பார்த்தான். அவள் சிரிப்பதைக் கேட்டான். மெத்தென்று

குழந்தையின் முதுகைத் தடவும்போது மாயாவின் கன்னங்களை வருடி விளையாடிய நினைவு வந்து நெஞ்சைக் கவ்விக் கொண்டது.

முத்தம்மா பார்த்து விடப் போகிறாளே என்று வெட்கத்துடன் கண் இமைகளைச் சுட்ட கண்ணீரை அடிக்கடி விழுங்கிக் கொண்டான்.

ஞாயிற்றுக் கிழமைகளில் அவன் தன் மகனைக் குளிப்பாட்டி உடை அணிவித்து மகிழ்ந்தான்.

முத்தம்மா தயாரித்துத் தந்த ஓட்ஸ் கஞ்சியில் பாலும், சர்க்கரையும் கலந்து தன் கையால் மகனுக்கு ஊட்டித் திருப்தியடைந்தான்.

காலை டிபனுக்குப் பின் காரில் மகனைப் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு கடற்கரை, கடைவீதி முதலிய இடங்களில் மெல்ல ஓட்டிச் சென்று அவனுக்கு வேடிக்கை காட்டினான்.

குழந்தை கேட்குமுன் வயிற்றை அழுத்தினால் கிரீச்சிடும் நாய், பூனை பொம்மைகளை வாங்கிக் கொடுத்து அவனை உற்சாகப் படுத்தினான்.

சாப்பாட்டு அறைச் சுவரிலே தொங்கிய படத்தைச் சுட்டிக் காட்டி, ''அம்மா!'' என்று குழந்தை மகிழ்ச்சியுடன் கூவியபோதுதான் மனம் கலங்கிப் போனான்.

மாயாவினால் வெறுமையாகிவிட்ட ஒரு ஸ்தானத்தை 'அம்மா' என்ற இடத்தை—அவனால் நிரப்ப முடியுமா?

'குழந்தை வளர்ந்து பெரியவனான பின், தன் அம்மா இறந்து போன விதத்தைக் கேள்விப்பட்டால் அந்தப் பிஞ்சு மனதில் என்னவிதமான பாதிப்புக்கள் ஏற்படுமோ?' என்று எண்ணித் தன்னுள்ளேயே தவித்தான். அவனால்

முடியும் மட்டும் மோகனுக்கு எந்தவிதக் குறையும் இன்றி வளர்த்து ஆளாக்க வேண்டும் என்ற ஆத்திரம் மிகுந்த தொரு பிடிவாத உணர்வு அவளை அடிக்கடி ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது.

மோகன் எத்தனை படுத்தினாலும், சுத்தி ரகளை செய்து தொல்லை கொடுத்தாலும் அவனால் ஓங்கி அதட்டவோ, முதுகில் மெல்லத் தட்டவோ மனமே இருக்காது. மனமே இருக்கவில்லை.

மாயா அவனை விரலால் கூடத் தொடமாட்டாள். அவன் செய்த விஷமங்களை வேடிக்கையாக ரசித்து மகிழ்ந்து கணவன்வீட்டுக்குத் திரும்பியபோது கதையாகச் சொல்லி மகிழ்வாள்.

உயிரையே மகன் மேல் வைத்துக் கொண்டிருந்தாள். அந்த மகனை சொல்லாலோ செயலாலோ துன்பப்படுத்தினால் மாயாவின் ஆன்மாவுக்கு அமைதி இருக்காதே என்ற கவலை.

அந்த ஞாயிற்றுக்கிழமை, மகனைக் காலை உணவுக்குப் பின் தன்னுடன் கூட அழைத்துச் சென்றான்.

காரைக் கடை ஓரமாக நிறுத்திவிட்டு மோகன்கேட்ட சாக்லெட்டுகளை வாங்கித் தந்தான்.

''அது!'' என்று கல்லாப் பெட்டியருகே இருந்த கண்ணாடி ஜாடியைக் குழந்தை சுட்டிக் காட்டியபோது சுருக்கென்று ஞாபகம் மனதைத் தைத்தது. ஜாடியிலிருந்த லாலிபாப் ஒன்றைவாங்கிக் காகிதத்தை உரித்துக் குழந்தை கையில் கொடுத்துவிட்டுக் காரைக் கடற்கரை ஓரமாக ஓட்டினான். நிழலான ஒரு இடத்தில் நிறுத்திவிட்டு மகனைத் தூக்கிக்கொண்டு சென்று பச்சைப் புல்வெளி மீது ஒரு மர நிழலில் நிறுத்தினான். ஏதோ யோசனையுடன் கடலைச் சிறிதுநேரம் வெறித்துவிட்டு மகன் பக்கம்

திரும்பியபோது அவன் ஒரு கணம் திடுக்குற்றான். மரத்தின் மீது ஒயிலாகச் சாய்ந்து கொண்டு லாலிபாப்பை மோகன் சுவைத்த காட்சி நெஞ்சை வருடவே அவன் நினைவு மாயாவை இரண்டாவது முறையாகச் சந்தித்த போது நிகழ்ந்த அந்தச் சிறு சம்பவத்தை நோக்கி ஓடி விட்டது.

இரண்டாவது முறையாக அவன் அவளை அப்படித்தான் சந்தித்தான்.

அம்மா கேட்ட முந்திரிப்பருப்பை வாங்கிவரக் கடைத் தெருவுக்கு வந்தவன் நடைபாதை ஓரத்திலே ஓங்கிவளர்ந்திருந்த ஒரு மரத்தின் நிழலில் அதன்மீது சாய்ந்தபடி அவள் நிற்பதைப் பின் பக்கத்திலிருந்து பார்த்தான். அம்முறை அவள் ஆரஞ்சு வண்ண வாயில் சேலையும் அதற்கேற்ற ரவிக்கையும்—தலையில் சுமையாகக் கனகாம்பரப் பூவுமாக அவனது கற்பனையின் ஓவியமாக நின்று கொண்டிருந்தாள்.

இடுப்பிலே ஒரு பெரிய அருக்கன் சட்டியில் மளிகை சாமான் பொட்டலங்களை வைத்து இடது கையில் தாங்கியபடி நின்றவளின் வலது கையில் ஒரு லாலிபாப்.

சுற்றுமுற்றும் கள்ளத்தனமாகப் பார்த்துவிட்டு அதை வாயில் வைத்துச் சுவைத்துக்கொண்டு நின்றவள் முன் போய், ''நான் பார்த்துட்டேன். ஹலோ!'' என்றான்.

அவள் திடுக்கிட்டு அதைக் கீழே போட்டு விடுவாள் என்று நம்பியவன் ஏமாந்து போனான்.

''உங்களுக்கு ஒண்ணு வேணுமா? என் அண்ணா குழந்தைகளுக்கு வாங்கினேன்'' என்று சிரித்தபடி அவள் அதை மேலும் ருசித்துக் கொண்டிருந்தபோது அந்த முகத்திலே தெரிந்த குழந்தைத்தனம்—கபடமற்ற சிரிப்பு எல்லாம் அப்படியேஅவனைக் கவர்ந்துகொண்டுவிட்டன.

மோகனது உருவில் எங்கேயோ அவனது உயிர்த் துடிப்பின் ஒரு சிறு துளியாக ஒளிந்து கொண்டிருக்கும் மாயாவை அவன் எப்படித்தான் மறப்பான்?

''மாயா! உன்னை நான் மறக்க மாட்டேன். உன் நினைவுக்காகவே வாழ்வேன். உன் பிள்ளையை நான் பத்திரமாப் பார்த்துப்பேன். கவலைப்படாதே!'' தனக்குள்ளே முனகியவன் தாங்க முடியாது குழந்தையை அணைத்துக் கொண்டு விம்மி விட்டான்.

எப்பொழுதாவது இப்படி உணர்ச்சி சமுத்திரமாகப் பொங்கிவரும்போது இன்னமும் அவன் அழத்தான் செய்தான், பச்சைக் குழந்தையைப் போல. அவள் மறைந்ததற்குச் சில நாட்களுக்கு முன்னர் குளிரும் ஜுரமுமாக அவன் அலுவலகத்திலிருந்து திரும்பி வ்ட்டிருந்தான்.

உடல் உபாதைகளைச் சகிக்க முடியாத ஒரு பிறவி அவன்.

சின்ன வயதில் பச்சை மாங்காயைத் தின்று விட்டு வயிற்று வலியுடன் அம்மா மடியில் படுத்து அழுத குழந்தை அவன்.

அம்மா முந்தானையையே அதிகமாகப் பிடித்துப் பழகி வளர்ந்து விட்ட அம்மாக் கோண்டு.

தலைவலியைத் தாங்க முடியாது படுக்கையிலே புரண்டான்.

சூடான காப்பியையும் தலைவலி மாத்திரைகளையும் எடுத்துக்கொண்டு படுக்கை ஓரத்தில் வந்து உட்கார்ந்த மாயா பக்கென்று சிரித்துவிட்டாள்.

''இந்தாங்க, வாயைத் திறங்க. இரண்டு மாத்திரையை ஒரு வாய் காப்பியோட முழுங்கிடுங்கோ. பத்து நிமிஷத்திலே வலி மறைஞ்சு போகும்.''

''தலைவலி மாத்திரைக்கு நீ விளம்பரம்செய்யறியா?'' முனகியபடி எழுந்து உட்கார்ந்தான்.

''வேடிக்கை இது. இப்படியா ஒரு தலைவலிக்குக் கண் கலங்கிப் பேசுவா! குழந்தை மோகனுக்கு அடுத்தபடி வீட்டில் நீங்க ஓர் குழந்தை. பெரிய ஆபீசர்னு இப்போ உங்களைப் பார்த்தா யாரும் நம்ப மாட்டா'' செல்லமாகச் சிணுங்கியபடி துவாலையை எடுத்து அவனது கண்களில் தளும்பிய நீரை ஒத்தினாள்.

''அப்படித்தான் வச்சுக்கோயேன். தலைவலி தாங்க முடியாத குழந்தை நான். வாலிபாப்பை நடைபாதையில் தின்னுண்டு நின்ற நீ ஒரு குழந்தை. எனக்கு நீ குழந்தை உனக்கு நான் குழந்தை. நமக்கு மோகன் ஒரு குழந்தை.''

''இப்போ இன்னொன்று வருதேன்னு கவலைப் படறேன்.'' சிரித்தாள்.

''வரட்டும்னுதான் ஆவலோடு எதிர்பார்க்கிறேன். பேர் கூட நிச்சயம் பண்ணி வச்சுட்டோமே!''

''என்னால மூணு குழந்தைகளைச் சமாளிக்க முடியுமா?''

''நாலாவதைக் கூட நீ சமாளிப்பே. ரொம்பக் கெட்டிக்காரி.'' அவள் கன்னத்தைச் செல்லமாக நிமிண்டி விட்டுச் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான். மாத்திரைகளைச் சாப்பிட்டதாலோ அல்லது அவளது பரிவின் காரணமோ கொஞ்ச நேரத்தில் தலைவலியும் ஜுரமும் மாயமாக மறைந்தன.

''இதோ பார் மாயா. காய்ச்சல்காரன்னு ராத்திரி சாப்பாட்டுக்குக் கஞ்சி வச்சுடாதே. காரமா வத்தல் குழம்பும் சுட்ட அப்பளமும் நாக்கு கேட்கிறது'' என்ற

போது அவன் அருகே வந்து அவனது சுருண்ட முடியைப் பிடித்து ஒரு குலுக்கு மெல்ல குலுக்கி விட்டு, "கேட்கும். இந்தக் குழந்தையாலே ஒரு நாள் டயட்டிலே இருக்க முடியாது. பொல்லாத குழந்தை" என்று கொஞ்சியதை நினைத்தபோது உடலும் உள்ளமும் பதறின. இனி அவன் வாழ்க்கையில் அப்படிப்பட்ட இனிய நிகழ்ச்சிகள் ஏற்படுமா? அந்த மன நிறைவுதான் திரும்பிக் கிடைக்குமா?

ஒளிவு மறைவின்றிக் கஷ்ட நஷ்டங்களை நண்பனிடம் சொல்வது போல மனம் விட்டு அவளிடம்தான் அவனால் பேச முடிந்தது.

பெற்றவர்களிடமோ அண்ணனிடமோ பேசித் தெளிவு காண முடியாத சங்கதிகளை அவளிடம் கேட்டு, அவளது ஆலோசனையை எத்தனையோ முறை பெற்றிருக்கிறான்.

ஐந்து உணர்வுகள் உள்ளவர்கள் மானிடர்கள். ஒரு சிலருக்கு ஆறாவது உணர்வாக ஒரு இண்ட்டுய்ஷன் என்பது உண்டு என்பார்கள். கம்பெனியில் ஏற்படும் சில்லறைச் சிக்கல்களைப் பற்றி அவளுக்கு அலசிப் பேசத் தெரியாது. ஆனால், "இப்படி நடக்கும், ஏன் கவலைப் படுகிறீங்க?" என்பதிலேயே அவனுக்கு மனம் இதமாகிப் போகும்.

"இதோ பாருங்க சிநேகிதன்னு வரானே அந்த சுந்தரம், அவனை நம்பாதீங்க. என்னவோ எனக்கு நல்லதாப் படலை."

எத்தனை முறை அவள் எந்த முகாந்திரமுமின்றி அவனுக்கு வரப் போகும் கஷ்டங்களைப் பற்றி எச்சரித்து விட்டிருக்கிறாள்!

நண்பன் என்று நம்பிய சுந்தரத்திற்கு வேலை போட்டுக் கொடுக்கப் போக-அவன் கம்பெனி பணத்திலே

கை வைத்து, நல்லவேளை, மனைவி எச்சரிக்கை செய்த தால் அவன் பெயருக்கு வர இருந்த பெரிய ஆபத்தையும் அவமானத்தையும் ஆரம்பத்திலேயே தவிர்த்து விட்டான.

'பயங்கரமான துன்பம் ஒன்று நிகழப் போகிறது' என்று அவள் அவனை ஏன் தன் மறைவு பற்றி எச்சரிக்க வேயில்லை ?

அன்று காலை வேலைக்குப் போகுமுன் விளையாட் டாகக் கேட்டானே !

''இன்னும் இரண்டு மாதத்திலே பிறந்த வீட்டுக்குப் போய் விடுவே இல்லையா !''

''இந்த ராமன் இருக்கும் இடந்தான் சீதைக்கு அயோத்தி, மோகன் பிரசவத்துக்குப் பிறந்த வீட்டுக்கா போனேன் ? உங்களை விட்டு ஒரு நிமிஷமும் போக மாட்டேன்'' என்று காலையில் உறுதி மொழி அளித்தவள், அதற்குப் பின், நாற்பத்தெட்டு மணி நேரத்திலே போய் விட்டாளே !

சிறிது நேரம் கழித்து அவன் குழந்தை மோகனுடன் வீட்டிற்குத் திரும்பியபோது, வெளியே புறப்பட ஆயத்தமாக முத்தம்மா காணப்பட்டாள்.

''இன்னிக்கு மட்டும் மன்னிச்சுக்கோங்க. ஒரு விபரீதம் நேர்ந்துருச்சு. நான் போய் உதவியாகணும்.'' மென்று விழுங்கினாள்.

''என்ன சங்கதி ?'' மௌனமாக அவளை நிமிர்ந்து பார்த்தான் அவன்.

''திருவான்மியூருக்கு நான் உடனே போயாகணும். அங்கே என் மாமன் மருமகள் செத்துப் போயிட்டாளனு துக்க சேதி வந்திருக்கு, சாப்பாடு எல்லாம் தயார் செய்து

சூடு ஆறாம இருக்க அந்த டப்பாக்குள்ளே வச்சிருக்கிறேன். சாதாரண சாவுன்னா எடுத்ததும் தலை முழுகிட்டு வந்திடுவேன். இது கோளாறான சங்கதி'' என்றவள் நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

''உடம்புக்குக் காய்ச்சல் வந்து போயிட்டாளாமா? ரொம்ப வயசோ ?''

''சின்னப் பொண்ணு. கைக் குழந்தைக்காரி. புருஷனோட ஏதோ சண்டை. அதுச்குன்னு மூட்டைப்பூச்சி மருந்தை சாப்பிட்டுட்டு—''

அவனுக்குக் கேட்கப் பிடிக்கவில்லை. ஆனாலும் மௌனமாக இருந்தான்.

''நேத்து காலையிலேயே போயிட்டாளாம். ஆனா ஆஸ்பத்திரியிலேதான்—''

அவளை மேலே பேச விட மனமின்றி, ''நீ போயாகணும் இல்லையா! சீக்கிரம் கிளம்பு'' என்றான்.

''உடலை ஊட்டுக்கு எடுத்துட்டு வந்துட்டாங்களாம். லேசிலே கொடுக்கலையாம். அதோட மட்டுமா ? பாவம். அந்தப் புள்ளையாண்டான் மேலே வீணா இல்லாத கதையை ஊர்க்காரங்க கட்டிப் பேசறாங்களாம்.''

இத்தனையையும் அவன் அனுபவித்து விட்டானே! மேலே அவளைப் பேச விடாது சட்டென்று வாயிற்கதவைத் திறந்து வழி விட்டு, அவள் கையில் பத்து ரூபாய்த் தாளை வைத்து அனுப்பி விட்டான்.

மறக்க வேண்டும் என்று நினைத்த அந்தச் சோக நினைவை முத்தம்மா தன் அறியாமையால் தூண்டி விட்டுப் போயிருந்தாள்.

அவளை நொந்து கொண்டு பயன் இல்லை. மாயா மறைந்து இத்தனை காலமாகியும் இன்னமும் இங்குமங்கும் அந்தக் குடியிருப்புப் பகுதியில் அவனைச் சிலர் ஒரு மாதிரியாகத்தான் பார்க்கிறார்கள்.

மாயா தீ விபத்தினால் இறந்து போனாள். அந்த ஒரு கொடுமை போதாதா? அவள் இறந்த அன்று மாலையே அவனைப் பார்க்க வீட்டைத் தேடிக் கொண்டு ஒரு போலீஸ் அதிகாரி வந்து விட்டார்.

''சிவராமன் என்பது நீங்கள்தானே?''

நல்ல வேளை, அவனுடன் கூடத் துணையாகப் பக்கத்து வீட்டுக்காரர் சதாசிவம் இருந்தார்.

''இன்னிக்கு இன்வெஸ்ட் நடக்கப் போகிறது. அதுக்கு முன்னாடி சில விவரங்களை நான் குறிச்சு வச்சுக்க விரும்பறேன். பின்னாடி சொந்தக்காரங்க சந்தேகங்களை எழுப்பினா நாங்க ரொம்ப சிரமப்பட வேண்டியிருக்கும். மறு பரிசீலனை செய்யணும்னு சில நேரங்களில் வம்பும் வழக்கும் வந்துடறதாலே—''

சதாசிவம் குறுக்கிட்டார். ''ஸார், மிஸ்டர் சிவராமன் ரொம்பவும் அதிர்ந்து போயிருக்கார். அந்த விபத்து நடந்தபோது அவர் இங்கே இருக்கவில்லை. நாங்கள் சிலர் அதற்கு சாட்சியாக இருக்கோம். அவரது கம்பெனி டைரக்டரோட அந்த நேரத்திலே இவர் இருந்தார் என்பதற்கு டைரக்டரும் தொழிற்சாலையில் உள்ள பல தொழிலாளரும் சாட்சி சொல்ல முடியும். இது விபத்து ஸார்!'' அடித்துப் பேசினார். நேரம், நடந்த விதம் எல்லாவற்றையும் கேட்டுக் குறித்துக் கொண்டு அவர் சென்றுவிட்டார். ஆனாலும் அதிலே பொதிந்திருந்த அதனால் விளையக்கூடிய சந்தேகங்களை எண்ணியபோது அவன் அவமானத்திலும் துயரத்திலும் சுருண்டு போனான்.

அடுத்த நாள் நிகழ்ச்சி. பஞ்சாயத்தார் பரிசீலனை செய்து இன்வெஸ்ட்டை முடித்ததும் மாயாவின் உடல் பிரேதப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது.

சூரிய வெளிச்சத்தில்தான் பரிசோதனையைச் செய்து முடிக்க வேண்டுமென்று சட்டம். அதனால் அன்று மாலை செய்யாது அவளைப் பிணக் கிடங்கிலேயே ஐஸ் துண்டுகளுடன் உறவாட விட்டிருந்தனர்.

அன்று இரவு அவனுக்குப் பொட்டுத் தூக்கம் கிடையாது.

படுக்கையில் குப்புறப் படுத்துக் கொண்டு, அவனை விட்டுப் பிணக் கிடங்கிற்குள் உறக்கத்தில் கிடக்கும் மனைவியை எண்ணி எண்ணி, அப்பப்பா, அவன் பட்ட துயரம்! அழுத அழுகை!

அந்தப் பயங்கர நிகழ்ச்சியை மனதிற்குள்ளே நினைத்த போதே அவன் மேனியெல்லாம் நடுங்கியது.

"பிரேதப் பரிசோதனை செய்துட்டு உடலைத் தந்து விடுவாங்க. நாம் போய் பார்த்துக்கணும்" என்று அவனைத் தள்ளிக் கொண்டு போனார் சதாசிவம்.

'மாயாவை டாக்டர் கூறு போடப் போகிறாரா?' எண்ணி 'ஓ'வென்று அலற முடியாத ஒரு அழுத்தமான துயரத்தில் மனம் சுக்கலாக வெடிக்க, ஆஸ்பத்திரியில் அந்தப் பகுதியின் வாயிலில் அவனைப் போலத் துக்கத்துடன் காத்திருந்த உறவினர் கும்பலில் ஒருவனாக அவன் நின்றதை, நேரம் யுகமாகக் கனத்ததை ஆயுளில் மறக்கத் தான் முடியுமா?

குறுக்கும் நெடுக்குமாக ஓடிய ஆஸ்பத்திரிப் பையனிடம் அவன் எப்படிக் கெஞ்சினான்!

''கொஞ்சம் பார்த்துக்கோ அப்பா. ரொம்பச் சிதைச் சுடாம...'' பேச முடியாமல் விம்மினான்.

சதாசிவம் தமக்குத் தெரிந்த ஒரு குட்டி டாக்டரிடம் ஏற்பாடு செய்து விட்டிருந்தார். ''மிஸ்டர் சிவராமன், கொஞ்சம் தைர்யமா இருங்கோ. எனக்குத் தெரிஞ்சவங்க தான் போஸ்ட்மார்ட்டம் பண்றாங்க. திருப்பி உடலைத் தரும்போது நன்னா, கெட்டியாத் தைச்சுத் தரச் சொல்லி ருக்கேன்.'' வாள் கொண்டு நெஞ்சை அறுப்பது போலி ருந்தது அவனுக்கு, அதைக் கேட்க.

கடைசியாக அவர் சொன்னதுதான் மகத்தானதொரு அதிர்ச்சியை அவனுக்குத் தந்தது.

''மிஸ்டர் சிவராமன், உடலை நாம் வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போக முடியாது.''

''ஏன் ஸார்?''

''புதுசா கட்டின காலனி அது. வீட்டுக்காரன் சம்மதிக்காது போனால்?''

''வீட்டுக்காரன் வெளியூரிலிருக்கான். என் நண்பன்.''

''இல்லை ஸார். காலனியை ஒட்டு மொத்தமா மேற் பார்வையிடுகிற 'பி' பிளாக் மாடிக்காரர் முன்னாடியே என்கிட்டே எச்சரிச்சுட்டார். குழந்தைகளும் பெண்களும் வசிக்கிற இடம். முதல் முதலாக இப்படி ஒரு சாவை அங்கிருந்து எடுக்கக் கூடாதுன்னு மறுப்புத் தெரிவிக் கிறார். அதனாலே நேரே கிருஷ்ணாம்பேட்டைக்கு எடுத்துண்டு போக ஏற்பாடு செய்திருக்கேன்.''

இரண்டு நாள் முன்னர், விபத்து நடப்பதற்குச் சில நொடிகள் வரை தன் வீடு, தன் பொருள்கள் என்று

வாழ்ந்த அவனது ஆசை மனைவிக்கு இறந்ததும் ஒரு துளியளவு இடம் இல்லாமல் போயிற்றே! என்ன அநியாயம்!

''நான் சும்மா குடியிருக்கவில்லை! வாடகை கொடுக்கிறேன். என் மனைவியின் உடல் கடைசியா எங்கள் வீட்டிலிருந்துதான் புறப்படணும்'' என்று கத்திக் கூச்சலிட்டுச் சண்டை போட வேண்டுமென்ற ஆவேசத்தில் துடித்தான்.

''எனக்கு உங்க செண்டிமெண்ட் புரிகிறது ஸார். ஆனா மத்தவா ஒத்துக்கணுமே?'' சதாசிவம் முதுகைத் தொட்டபோது அவன் கண்கள் கண்ணீரைக் கொட்டின.

''கொஞ்ச நாள் பொறு மாயா. லோனுக்கு அப்ளை பண்ணி அடையாறு பக்கமா, சமுத்திரக் கரையோரம் ஒரு சின்ன இடம் வாங்கி நமக்குன்னு ஒரு வீடு கட்டிக் கொண்டு விடுவோம்'' என்று சொல்லியிருந்தான். அவர்களுக்கு என்று ஒரு இடம் சொந்தத்தில் இல்லாததால் மாயா அவனிடமிருந்து மார்ச்சுவரியிலிருந்தே விடை பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. அதனால் ஏற்பட்ட நெஞ்சு வலியை அவன் சட்டென்று மறக்கத்தான் இயலுமா?

முத்தம்மாவின் சொத்தக்காரிக்கு இருந்ததொரு பாக்கியம், சொந்த வீட்டிலிருந்து சுடுகாட்டுக்குப் புறப்பட இருந்த ஒரு தகுதி அவனது ஆசை மனைவிக்கு இல்லையே!

உணர்ச்சியின் கொந்தளிப்பைத் தாங்க முடியாது, அந்தச் சோக நினைவின் அழுத்தமான அடியைப் பொறுக்க முடியாது தொப்பென்று ஒரு சோபாவில் சரிந்து கொண்டான்.

# 5

அடுத்த நாள். அப்பாவிடமிருந்து ஒரு கடிதம், 'அவசரமாக அவன் குழந்தையுடன் புறப்பட்டு வர வேண்டும். அம்மாவுக்கு உடம்பு சரியில்லை' என்று வந்திருந்தது.

'இதென்ன சோதனை?' என்று திகைப்புடன் அவன், அலுவலகத்திலிருந்து லீவு எடுத்துக் கொண்டு குழந்தையுடன் காரிலேயே புறப்பட்டு விட்டான். வீட்டை முத்தம்மா பார்த்துக் கொள்வதாக வாக்களித்து விட்டிருந்தாள்.

விடியற்காலை வேளை. அவர்கள் வீட்டு வாயிலை அவன் அணுகியபோது அம்மா வாசலில் காய்கறிகள் வாங்கிக் கொண்டு நிற்பதைக் கண்டு அதிர்ந்து போனான்.

''உடம்புக்கு என்னவோன்னு பயந்துட்டேன்.'' சொன்னபடி குழந்தையுடன் படியேறி உள்ளே வந்தான். அப்பா பல் துலக்கி விட்டு வழக்கம் போலக் காப்பி டம்ளர் ஒரு கையிலும் பத்திரிகை இன்னொரு கையிலுமாகக் கூடத்து சாய்வு நாற்காலியில் குண்டுக்கல் போல உட்கார்ந்திருந்தார்.

''அம்மாவுக்கு உடம்புக்கு என்னவோ ஏதோன்னு பத்து நாள் லீவில் வந்தேன். இப்படி அவசரமா அழைச்சதின் நோக்கம்?'' ஆத்திரத்துடன் கேட்டபடி ஊஞ்சலில் அமர்ந்தான்.

''முதல்லே குளிச்சிட்டு காப்பி டிபன். பிறகு ஆற அமரப் பேசலாம்'' அப்பா ரொம்பவும் அழுத்தலாக அதட்டினார்.

அண்ணா மன்னி குழந்தைகள் எல்லோரும் வெளியூருக்குப் போயிருந்தனர்.

வீட்டில் அப்பாவும் அம்மாவும் மட்டுமேதான் இருந்தனர். இந்தச் சமயத்தில் அவனை அவசரமாக வர வழைத்ததற்குக் காரணம் இருக்க வேண்டும்.

கொஞ்ச காலமாக அப்பாவுக்கு ஒரு ஆசை. பக்கத்து வீட்டுக்காரர் நாலைந்து தடவை அமெரிக்காவுக்குப் போய் விட்டு வந்திருந்திருந்தார். ஒரு தடவையாவது தாமும் தம் மனைவியுடன் அருகிலிருக்கும் சிங்கப்பூரை யாவது சுற்றிப் பார்த்து விட்டு வரவேண்டுமென்ற ஆவல். ஒரு சமயம் வெளிநாட்டுப் பயணத்திற்கு ஏற்பாடு செய்து கொடுத்துப் பண உதவி வேண்டத்தான் அவனை அம்மாவுக்கு உடம்புக்கு சுகமில்லையென்று கதை கட்டி வரவழைத்தாரோ?

காப்பி டிபன் சாப்பிடக் கூடத்தில் அம்மா பரப்பி விட்டிருந்த இலை முன் அப்பாவுடன் கூட உட்கார்ந் தான்.

அம்மா மோகனைக் குளிப்பாட்டப் பின் கட்டிற்கு எடுத்துச் சென்றாள். பாட்டியிடம் ஒட்டாத குழந்தை குளியலறையிலிருந்து கூப்பாடு போடுவது அவனுக்குக் கேட்டது. இலையில் இருப்புக் கொள்ளவில்லை. சமையலறையிலிருந்து புடவை சர சரக்கும் ஓசை கேட்டு நிமிர்ந்தான். ஒரு கணம் ஆச்சர்யத்தில் தன்னையே மறந்து போனான்.

'யார் இந்தப் பெண்? உயரமாக, சற்றுப் பூசினாற் போலத் தடித்த உடம்புடன், மூக்கும் விழியுமாக அவனை ரொம்பத் தெரிந்தவள் போலப் புன்முறுவலித்தபடி இட்லி நிறைந்த தட்டும் சாம்பாருமாக அருகில் வந்து நிற்பது?'

"போடும்மா. என்ன சங்கோஜம்? இனி மேலே அந்தப் பொறுப்பெல்லாம் வெகு சீக்கிரத்திலே வந்து வாய்க்கப் போகிறதே!" அப்பா உற்சாகமாகப் பேசியதை கேட்டு அவன் திடுக்கிட்டுப் போனான்.

தங்க வளையல்களுடன் கூடக் கலந்திருந்த கண்ணாடி வளையல்கள் குலுங்கத் தனது தங்க நிறக் கரத்தை நீட்டி அவள் மிகவும் பணிவுடன் சூடான இட்லி களை அவனது இலையின் மீது வைத்து சாம்பாரை ஊற்றி நெய்யை வார்த்தாள். பின்னர் தான் அப்பாவுக்குப் பரிமாறினாள்!

''பாத்தியா, இப்பவே இந்த ஓரவஞ்சனை! என்னை விட்டுட்டு, அவனுக்குத்தானே முதலில் பரிமாறினே!''

அப்பா நீலகண்டன் உரத்த குரலில் சிரித்தார். மோகன் பின் கட்டிலிருந்து கூக்குரல் போட்டுக் கத்துவது கேட்டதும் துடித்தபடி கையை உதறிக்கொண்டு எழுந்து விட்டான் சிவராமன்.

''நீங்க சாப்பிடுங்கோ. நான் போய் கவனிச்சுக் கிறேன்.'' பொதுவாகக் கூறிவிட்டுப் பெரியவருக்கும இட்லி சாம்பாரைப் பரிமாறிவிட்டு வேகமாகப் பின்கட்டுக்கு விரைந்தாள் அந்தப் பெண்.

''ரொம்பப் புத்திசாலி. வேலை பண்ணிண்டு இருக்கா. வேலையை உடனடியா விட்டுடணும். வீட்டைக் கவனிக்கவே போதிருக்காதுன்னு சொல்லி யிருக்கேன்.'' லேசாகச் சிரித்தார் நீலகண்டன்.

''உட்கார்ந்து சாப்பிடு. ஏன் இப்படி எழுந்து நின் னுண்டு துடிக்கிறே? அவ யார்னு புரியலையா? உன் அத்தைப் பெண் லதா. அவ அண்ணனுக்கு மூணு குழந்தைகள் நண்டும் சிண்டுமா இருக்கு. அதுகளைக் கட்டி மேய்ச்சு அவளுக்குக் குழந்தைகளைப் பார்த்துக்க ரொம்ப நன்னாவே தெரியும் பார். மோகன் அடங்கிப் போய்விட்டான்! என் கிட்ட நிக்காமக் கத்தினான். இட்லி எப்படியிருக்கு? மல்லிகைப் பூப் போல இல்லே? லதா தான் நேத்திக்கு மாவரைச்சுக் கொடுத்தா. சாம்பார்

கூட அவதான் வச்சா. அவளைப் பட்டணத்திலிருந்து நாலு நாளைக்கு முன்னாடி அப்பா வரவழைச்சுட்டார். நேத்திக்கு அவ அண்ணாவோட பேச்சு வார்த்தைகளை முடிச்சுட்டார்.'' அம்மா விவரித்தாள்.

அவனுக்கு இப்போது எல்லாம் நன்றாகவே விளங்கி விட்டது. கொழுந்து விட்டுக் கொண்டு எழுந்த கோபத்தை அடக்கிக் கொண்டு இலையில் உட்கார்ந்தான். வேகமாகச் சாப்பிட்டுக் கையைக் கழுவிக் கொண்டு வந்தான்.

மோகனுக்கு மாற்றுடை அணிவித்துத் தோளில் சாத்திச் சமாதானப் படுத்தியபடி, தயாராக அவனுக்குப் பிசைந்து வைத்திருந்த பருப்பு சாதத்தை ஊட்டியபடி, கடைக்கண்ணால் சிவராமனைப் பார்த்தபடி வந்து ஓரமாக நின்றாள் லதா.

''பார்த்தியா, அவகிட்ட குழந்தை எப்படி ஓட்டிண்டுட்டான்!''

அம்மா உரத்த குரலில் மகிழ்ச்சியுடன் சொன்னதைக் கேட்டு சிவராமன் பொங்கிப் போனான்.

'இதென்ன அசிங்கமானதொரு நாடகம்! இதில் இந்தப் படித்த பெண்ணும் பண்பு கெட்டுப் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறாளே!' மனம் குமுறியது அவனுக்கு.

''என்னடா, நாங்களாம் பேசிண்டு இருக்கோம், திருதிருன்னு முழிக்கிறே! பல விஷயம் இருக்கு பேச. இப்படி உட்கார்.'' ஊஞ்சலில் தம் அருகே இருந்த இடத்தைச் சுட்டிக் காட்டினார், அப்பா.

''என்னப்பா இந்த மூடுமந்திரம்? ரொம்ப வேடிக்கை பண்றேளே!'' ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு அடிக் குரலில் கேட்டான்.

''வேடிக்கையில்லை. முறையாத்தான் எல்லாம் செய்யறேன். மாயா போய் ஒரு வருஷம் முடிஞ்சுட்டது—

திவசம் செஞ்சு முடிச்சுட்டே. இனிமேலயாவது உன் வாழ்க்கையைப் பத்தி நீ முடிவு எடுக்க வேண்டாமா? லதா ஏற்கெனவே நான் பார்த்த பெண்—அந்நியம் இல்லையே! என் ஒண்ணுவிட்ட தங்கை பெண்.''

''அதனாலே?''

''இந்தக் கல்யாண மாசத்திலேயே ஒரு முகூர்த்தம் பார்த்து உனக்கும் அவளுக்கும் கல்யாணத்தை முடிச்சுட ணும்னு தீர்மானம்.''

''இது உங்க தீர்மானம்—என் தீர்மானத்தைப் பத்தித் தெரிஞ்சிக்க வேண்டாமா?''

''ஏண்டா, மறுபடியும் காதல் கத்தரிக்காய்னு உங்க ஆபிசிலே யாரையாவது பார்த்து வச்சிருக்கியா?''

சே! அப்பா எத்தனை மட்டமாக அவனை ஒரு நொடியில் எடை போட்டு விட்டார்!

''தனியா ஒரு வேலைக்காரியை வீட்டைக் கவனிச்சிக் கப்போட்டுண்டு என்னவோ குடித்தனம் பண்றயாமே! அது சாத்யப்பட்ட சங்கதியா? நடந்ததை மறந்துட்டு நீ சந்தோஷமா இனியாவது வாழ வேண்டாமா?''

''சந்தோஷமாத்தானே இருக்கேன்.''

''பேயறைஞ்சாப்பல மூஞ்சியைப் பார்த்தாலே பெண்டாட்டி செத்தவன்னு சொல்லலாம்; வீணா விவாதம் செய்யாதே. அப்பா, அண்ணா எல்லாரும் சேர்ந்து ஏக மனதா தீர்மானிச்சது'' அம்மா சொன்னாள்.

''அம்மா, ஒரு பக்கமே பேசறேளே! நீங்க அந்தப் பெண் கிட்ட விஷயத்தைக் கேட்டு முடிவு செய்தேளா.''

''நாம் பேசறதையெல்லாம் கேட்டுண்டு இங்கேதானே நிக்கிறா! அவளுக்கு இந்தக் கல்யாணத்திலே சம்மதம் இல்லாட்டா நிற்பாளா? நாங்கதான் இதில் இறங்குவோமா?''

சட்டென்று திரும்பி லதாவைப் பார்த்தான் சிவராமன். லேசாக முகம் சிவந்து, இதழ்க்கடையிலே ஒரு குறுநகையும் கண்களில் பளபளப்புமாகக் குழந்தையை அமர்த்திக்கொண்டு நின்று கொண்டிருந்தாள்.

''அம்மா, நீங்களும் லதாவும் முதலில் ஏதாவது சாப்பிடுங்கோ. பசியா இருப்பேள். பிறகு எனக்கு லதா கிட்டக் கொஞ்சம் பேசணும்.''

குப்பென்று முகம் சிவந்துபோனாள் லதா. அப்பாவும் அம்மாவும் ஒருவரை ஒருவர் அர்த்தபாவத்துடன் பார்த்துக் கொண்டனர்.

சிறிது நேரத்தில் அம்மாவும் லதாவும் காப்பி டிபனை வேகமாக முடித்துக் கொண்டு சமையலறையிலிருந்து வெளிப்பட்டனர்.

''முதல்ல நான் லதாவோட பேசி முடிச்சுடறேன். பிறகு உங்க ரெண்டு பேர் கிட்டேயும் வந்து விஷயத்தைச் சொல்றேன்.''

வெற்றிலைக்குச் சுண்ணாம்பு தடவி நரம்பு கிழித்துக் கொண்டிருந்த நீலகண்டன் உற்சாகத்துடன் அதைச் சுருட்டி வாயில் போட்டு மென்றார்.

வாயில் நிறைந்த வெற்றிலைச் சாற்றைத் துப்ப முடியாதபடி முகத்தை நிமிர்த்திக் கொண்டு, ''பேஷ், அப்படியே செய்'' என்றார்.

''இப்படித் தோட்டப் பக்கம் வரமுடியுமா?'' சொல்லிக் கொண்டு பின்னாலிருந்த கிணற்று மேடையை நோக்கி நடந்தான் சிவராமன்.

குழந்தை மோகனைத் தான் தூக்கிக்கொண்டு ஜாடை காட்டி லதாவைப் பின்னால் தள்ளிவிட்டாள் அம்மா.

''தோய்க்கிற கல்மேலே உட்கார்ந்துக்கோ. நான் நின்னுண்டே பேசறேன்.''

ஆரம்பித்தான் அவன்.

தலையைக் குனிந்தபடி லதா கல்மீது மெல்ல உட்கார்ந்து கொண்டாள். அவள் முகம் இன்னமும் சிவப்பாகவே இருந்தது.

''இந்தக் கல்யாணத்தைப் பற்றி ன் அப்பா, உன் அம்மா, அண்ணா எல்லோரும் மு வு செய்திருப்பது வாஸ்தவம். உன் அபிப்ராயத்தை யாராவது கேட்டாளா?''

நிமிர்ந்து மெல்ல அவனைப் பார்த்தபடி, 'ஆமாம்' என்று தலையை அசைத்தாள்.

''நீ என்னைக் கல்யாணம் செய்துக்க ஒப்புக் கொண்டாயா?''

''ஆமாம்!'' கிணற்றுக்குள்ளிருந்து பேசுவது போல மெல்லிய குரலில் பதிலளித்தாள். முகம் முன்னைவிட ரத்தமாகியது.

''இரண்டாவது மனைவியாக என்னைக் கல்யாணம் செய்துக்க நீ ஒப்புக்கிறாயா?''

''ஆமாம். மனப்பூர்வமாக ஒத்துக்கிறேன்.''

''ஆனால் நான் ஒத்துக்கலைன்னு சொன்னால்?''

திடுக்கிட்டு அவள் அவனை நிமிர்ந்து நன்றாகவே பார்த்தாள். சற்றுமுன் சிவந்து காணப்பட்ட அவள் முகம் வெளிறிப் போனது. பேச முடியாது உணர்ச்சி வசத்தில் அவளது உதடுகள் துடிப்பதைப் பார்த்தான்.

"ஐயாம் ஸாரி லதா! உன்னை என் அப்பாவும் அம்மாவும் இப்படி அவமானப்படுத்தியிருக்க வேண்டாம். என்னைவிட ஒரு சிறந்தவனுக்கு நீ வாழ்க்கைப்பட்டு சுகமாக வாழ வேண்டியவள். உன்னை மனைவியாகஏற்க நான் தகுதியற்றவன். உணர்வுகள் எல்லாம் என் மாயாவுடன் எரிந்து சாம்பலாகி விட்டதால் நான் ஒரு பட்ட மரம். என்னோடு திருமணத்தில் இணைகிற எந்தப் பெண்ணும் சந்தோஷமாகவே இருக்க முடியாது. அதை விட ஒரு பாழும் கிணற்றில் அவள் மகிழ்ச்சியுடன் இறங்கி விடலாம்."

லதாவின் கண்களில் நீர் புரண்டது. "அப்படின்னா?" திக்கினாள்.

"நீ பேசாம சென்னைக்குப் போய் செய்து கொண்டிருந்த வேலையைத் தொடர்ந்து கவனி. உனக்குன்னு ஆண்டவன் போட்டிருக்கிறவன் குறித்த நேரத்தில் வருவான். எங்கப்பா அம்மாவின் சூழ்ச்சியில் மாட்டிக்காதே. முகத்திலடித்தாற்போல் சொல்ல என் மனம் கூசுகிறது. என்னால் உன்னைக் கல்யாணம் செய்துக்க முடியாது."

அதற்குமேல் லதா அங்கு தாமதிக்கவில்லை. விடுக்கென்று எழுந்து விம்மலும் திக்கலுமாக உள்ளே ஓடி வந்தாள்.

அம்மாவும் அப்பாவும் அதிர்ந்து போனார்கள்.

அப்பா கோபத்துடன் பின்பக்கம் ஓடி வந்தார். அம்மா குழந்தையை இடுப்பில் தூக்கிய வண்ணம் பின் தொடர்ந்தாள்.

''லதா அழறாளேடா! என்ன சொன்னே'' அப்பா அதட்டினார்.

''நீங்க போட்ட இந்த அசிங்கமான நாடகத்திலே அவள் பங்கு எடுத்துக்கொண்டது தவறுன்னு சொன்னேன்.''

''நீ என்னதான் நினைச்சிண்டு இருக்கே?'' அப்பா உரக்கக் கத்தினார்.

''நம்ம வீட்டுச் செய்தி நாலு வீட்டுக்குத் தெரியணும்னா ஒங்கிக் கத்துங்கோ. ஆனா ஒண்ணை மறக்காதீங்க—அனாவசியமா ஒரு பாவமும் அறியாத ஒரு பெண் மனசைக் குழப்பி, இல்லாத ஆசைகளைத் தூண்டிவிட்டு-அவளை இரண்டாந்தாரக் கல்யாணத்துக்கு சம்மதிக்க வச்சிருக்கேள். நான் கல்யா ணம் செய்துக்க முடியாதுன்னு மறுப்பு தெரிவிச்சது உ க மூலம் நாலு பேருக்குத் தெரிஞ்சா, பாவம் அந்த பெண்ணின் வாழ்க்கையில் பாதிப்பு ஏற்படும்.''

''என்னடா சொல்றே?''

''முடிவாச் சொல்றேன். லதாவை நான் கல்யாணம் செய்துக்க மறுக்கிறேன்—என்னை வற்புறுத்த உங்கள் இருவருக்கும் உரிமை கிடையாது.''

''இப்ப எனக்குப் புரிகிறது. இவன் மறுபடியும் காதல் வலையிலே மாட்டிக்கொண்டு இருக்கான்.''

''இப்படிச் சின்னத்தனமாப் பேச உங்களுக்கு மனம் வரதே—அதை நினைச்சா சிரிக்கிறதா, அழறதான்னு தெரியலை அப்பா. ஒரு வழியில் நான் காதல் வலையில் தான் சிக்கியிருக்கேன். மாயா மேலே எனக்கு ஏற்பட்ட காதல் இன்னும் பசுமையாத்தான் இருக்கு.''

''பேத்தாதே. மோகம் முப்பது நாள்—ஆசை அறுபது நாள் ன்பா. ஒரு வருஷத்துக்கு மேலாச்சு, இன்னமும்

போனவளைப் பத்தி நினைச்சு உருகறானாமா?'' அப்பா சீறினார்.

''மோகம் முப்பது நாள் இல்லேப்பா. மாயாவைப் பொறுத்தவரை என் மனசிலே அவள் மோகம் மூவாயிரம் வருஷத்துக்குத் தங்கும். அது மனதைவிட்டு நகரக் கூடாதுன்னு அவள் தன் நினைவாலே என் மனதைச் சுற்றி ஒரு இரும்புத்திரை போட்டிருக்கா. அந்த மோகத் திரையை உடைச்சுண்டு எந்தப் பெண்ணும் என் மனதைத் தொட்டு விட முடியாது.''

''இந்தச் சின்ன வயசிலேயே ஏண்டா இப்படி ஒரு விரக்தி?''

''இதே மாதிரியான நிலையிலே மாயா இருந்திருந்தால், நான் இறந்து அவள் விதவையாகி விட்டிருந்தால், நீங்கள்ளாம் இரக்கப்பட்டு அவளுக்கு மறுமணம் செய்விக்க ஆசைப்பட்டிருப்பேளா?''

''இதென்ன குதர்க்கமான பேச்சு? ஆணும் பெண்ணும் சமமாயிடுமாடா?''

''மத்தவங்களுடைய அபிப்ராயம் வேறாக இருக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரை நானும் மாயாவும் சரி நிகர் சமம். ஒருத்தருக்காக ஒருத்தர் வாழ்றவங்க. நான் செத்துப் போயிருந்தால் என் நினைவை மனதில் வைத்துப் பூஜித்துக்கொண்டு எனக்காக வாழ்ந்திண்டு இருப்பா. இப்போ அவ என்னை முந்திக் கொண்டதாலே அவ நினைவுக்காக நான் வாழ விரும்பறேன்.'

''இதுதான் உன் முடிவா?''

''ஆமாம் அப்பா—தீர்மானமான முடிவு—மாயா இருந்த இடத்திலே வேறு ஒரு பெண்ணை வச்சுப் பார்க்க என் மனம் ஒப்பவே ஒப்பாது. உங்கள் வார்த்தைக்குக்

கட்டுப்பட்டு ஒரு பெண்ணின் வாழ்க்கையைச் சூன்யமாக்கும் அளவுக்கு நான் ஒரு பொறுப்பற்றவன் இல்லே.''

''ரொம்பப் பெரியபேச்சா பேசக் கத்துண்டு இருக்கே. இது நீ எங்களை இரண்டாவது முறையா அவமானப் படுத்தறே. ஞாபகம் இருக்கட்டும்.''

''தோளுக்குமிஞ்சின பிள்ளையை இன்னமும் ஆட்டிப் படைக்கணும்னு நீங்க இரண்டாவது முறை முயன்று தோற்றுவிட்டிருக்கேள். ஞாபகமிருக்கட்டும்.''

''அப்பாவை எதிர்த்துப் பேச நன்னாவே கத்துண்டு இருக்கே!'' அம்மா குரல் தழதழத்தது.

''உங்களுக்கும் எனக்கும் வந்துள்ள ஒரு பெரிய பழி என் முடிவால் விரைவில் விலகிப் போகும் என்பதையும் சொல்ல வேண்டியிருக்கு. உங்களுக்குத் தெரியுமா அம்மா? மாயா தீ விபத்திலே இறந்து போனது உண்மையென்றாலும் நான் குடியிருக்கும் இடத்தில் உள்ள சிலரும் ஆபீசில்வேலை பார்க்கிற சிலரும்இன்னமும் நம்பவில்லை. நீங்களும் நானும் சேர்ந்து திட்டமிட்டுக் கொலை செய்து விட்டதாக ஒருபழி நம்மைச் சூழ்ந்துண்டு இருக்கு. மாயாவுக்காகவே நான் வாழ்கிறேன்; என் குழந்தையை அவளுக்காக வளர்த்து ஆளாக்குகிறேன் என்பதைக்காலம் சொல்லும்—அப்போ எல்லாரும் உண்மையை உணர்வார்கள்,'' சொல்லிக்கொண்டே தாயின் இடுப்பிலிருந்த தன் மகனைக் கைநீட்டி வாங்கிக் கொண்டான்.

''அம்மா—அப்பா, என் முடிவைச் சொல்லிட்டேன். இனி இங்கே ஒரு நிமிஷம் தாமதிப்பது உங்களுக்கும் நல்லதல்ல—அந்தப் பெண்ணுக்கும் நல்லதல்ல—எனக்கும் மரியாதையில்லை. எப்போ உங்களுக்குத் தேவைப்படறதோ அப்போ என் வீட்டுக்கு அப்பாவோ—அம்மாவோ ரெண்டு பேரும் சேர்ந்தோ வரலாம். என் வீடு எப்பவும்

உங்களுக்குத் திறந்திருக்கும் — என் உதவி எப்பவும் உங்களுக்கு உண்டு. குழந்தையை ஆசீர்வாதம் பண்ணுங்கோ. நாங்க இப்பவே புறப்படுகிறோம்.'' என்று சொல்லிவிட்டு, ''தாத்தாவுக்கு டாடா சொல் மோகன்'' என்றான். குழந்தை மகிழ்ச்சியுடன் சிரித்தபடிக் கையை அசைக்க—பார்வதி கண் கலங்கிப்போக...அப்பா கோபாவேசத்துடன் வெறிக்க—சமையலறையிலிருந்து லேசாக வெளிவந்த விசும்பல் ஒலியைக் கேளாதவனாக—வாயிற் கதவைத் திறந்துகொண்டு குழந்தையுடன் காரில் ஏறிக் கொண்டான்.

கார் புறப்பட்டபோது அவன் பக்கத்திலே அரூப வடிவிலே மாயா அமர்ந்துகொண்டு,

''என்னை...ஏமாத்த மாட்டேள்னு தெரியும். ஏன்னா —நான் உங்களைக் காதலிக்கிறேன்—உங்களுக்காக காத்திருப்பேன்'' என்று கிசுகிப்பது போன்ற பிரமையிலே லேசான மனதுடன் காரை வேகமாக ஓட்டிக் கொண்டு சென்றான்.